Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

விலை: ரூபா 8.00

மலர்:04 திருவள்ளுவர் ஆண்டு: 2036 கார்த்திகை 08 ஹிஜ்ரி 1428 ஷவ்வால் 20 (23.11.2005) புதன்கிழமை இதழ் 54

Dialog டயலொக்

100/= 1000/= விலைகளில் கையடக்கத் தொலைபேசி அட்டைகளும் மற்றும் தொலைபேசி அட்டைகளையும் SIM இணைப்புக்களையும் (Connection) மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளவும் தபால் அலுவலக சேவைகள், துரித தபால் சேவைகள் வெளிநாட்டுப் பொதிகள் (Parcel) சேவைகளுக்கும்

WESTERN UNION

உலகின் எப்பாகத்திலிருந்தும் ஒருசில நிமிடங்களில் பணத்தைப் பெற்றுக்கொள்ளவும் இன்னும் பல சேவைகளையும் ஒரு கூரையின் கீழ் பெற்றுக்கொள்ள நாடுங்கள்

Sri Murugan
Tele Communication & Agency
Post Office.
303, K.K.S. Road, Jaffna.
T.P: 021 222 5392,
Fax: 222 3214
E.Mail: srimurugan@eureka.lk

UNIVERSITY OF JAFFNA LIBRARY PERIODICALS 2005

# நாடெங்கும் மழை, வெள்ளம்; 50 ஆயிரம் பேர் இடம்பெயர்வு!



பரந்தன், முல்லைத்தீவு வீதியில் மக்களை ஏற்றி இறக்கும் ரக்டர்

யாழ்ப்பாணம் —

நாட்டின் பல்வேறு பகுதிகளில் தொடர்ச்சியாக பெய்துவரும் பெருமழை காரணமாக ஏற்பட்ட வெள்ளப்பெருக்கினால் பல்லாயிரக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்துள்ளதுடன், போக்குவரத்துகள் துண்டிக்கப்பட்டு மக்களின் அன்றாட இயல்பு வாழ்க்கை முற்றிலுமாக பாதிக்கப்பட்டுள்ளது.

நேற்றையதினம் யாழ்.குடாநாட்டில் மழைவீழ்ச்சியின் அளவு குறைந்திருந்த போதிலும் நேற்றுமுன்தினம் பெய்த மழையால் குடியிருப்புக்களில் வெள்ளம் புகுந்து இடம்பெயர்ந்த மக்கள் தொடர்ந்தும் உறவினர் நண்பர்கள் மற்றும் பொது இடங்களில் தங்கியுள்ளனர். திருநெல்வேலி வானிலை அவதான நிலையத்தின் தகவல்களின்படி நேற்றுக்காலை 9 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தினுள் 85.6 மில்லிமீற்றர் மழையும், நேற்று மாலை 3 மணி தொடக்கம் 6 மணிக்கிடைப்பட்ட நேரத்தினுள் 15.7 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும் பதிவாகியுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தில் வெள்ளப் பெருக்கினால் 8069 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இதில் கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் 2929 குடும்பங்களும், கரைச்சி பிரதேச செயலர் பிரிவில் 2466 குடும்பங்களும், பூநகரி பிரதேச செயலர் பிரிவில் 192 குடும்பங்களும், பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவில்

(11 ஆம் பக்கம் பார்க்க)

## விமல் வீரவன்சவுக்கு திடீர் நெஞ்சுவலி!



கொழும்பு —

ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினரும், பிரசார செயலருமான விமல் வீரவன்ச திடீர் நெஞ்சுவலி ஏற்பட்டதையடுத்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக அந்தக் கட்சி வட்டாரங்கள் (12 ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சரவை நியமனத்தில் இழுபறி பதவியேற்பு இன்றே நடைபெறும்!

கொழும்பு —

புதிய அமைச்சரவை நியமனங்கள் தொடர்பாக ஆளும் கூட்டணிக் கட்சிக்குள் கருத்து வேறுபாடுகள் தோன்றியிருப்பதால் - அமைச்சர்களின் பதவியேற்பு நிகழ்வின்போது இரண்டாவது நாளாகவும் ஒத்துப்போக வேண்டிய நிலை மகிந்தவுக்கு ஏற்பட்டது.


புதிய ஜனாதிபதியாக பதவியேற்ற மகிந்த ராஜபக்ஷ நேற்றுமுன்தினம் பிரதமராக ரட்ணசிறி விக்கிரமநாயக்கவை நியமித்துள்ளதுடன் - அன்று மாலையே புதிய அமைச்சரவை பதவியேற்கும் என அறிவித்திருந்தார்.

ஆனால் நேற்று முன்தினம் பதவியேற்பு இடம்பெறவில்லை. பின்னர் நேற்று பதவியேற்பு நிகழ்வு நடைபெறும் என அறிவிக்கப்பட்டது. ஆனால் நேற்றும் அமைச்சர்கள் பதவியேற்பு இடம்பெறவில்லை.

முக்கிய அமைச்சுப் பொறுப்புகள் தொடர்பாக ஆளும் கூட்டணிக்குள் தோன்றியிருக்கும் முரண்பாடுகளைத் தீர்ப்பது மற்றும் அமைச்சரவை அமைச்சர்களின் தொகையை 25 ஆகக் குறைப்பது உள்ளிட்ட பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு கால அவகாசம் தேவைப்பட்டதாலேயே நேற்றும் பதவியேற்பு நிகழ்வு இடம்பெறவில்லை எனத் தெரியவருகிறது.

எனினும், அமைச்சரவையில் இடம்பெறவுள்ள அமைச்சர்களின் பெயர்ப்பட்டியலை ஜனாதிபதி மகிந்த முடிவு செய்துவிட்டதாகவும் - இன்று பதவியேற்பு நிகழ்வு இடம்பெறும் என்றும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி பொதுச்செயலர் சுசில் பிரேம ஜெயந்த தெரிவித்தார். (12 ஆம் பக்கம் பார்க்க)

## உயர் படிப்பை முடிப்பதற்கு வெளிநாடு செல்லும் ரணில்



கொழும்பு —

தனது கலாநிதிப் பட்டத்தை முடிப்பதற்காக ஐ.தே.கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க வெளிநாடு செல்லவுள்ளதாக அவரது குடும்பத்துடன் தொடர்புடைய வட்டாரங்கள் தெரிவித்தன. (12 ஆம் பக்கம் பார்க்க)

## ரட்ணசிறியின் பிரதமர் நியமனம் யுத்தத்தைத் தொடங்கும் முயற்சி!

### சந்தேகம் எழுப்புகிறார் விக்கிரமபாகு


கொழும்பு —

புதிய ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டிருக்கும் மகிந்த ராஜபக்ஷ, பிரதமராக ரட்ணசிறி விக்கிரமநாயக்கவைத் தெரிவுசெய்திருப்பது - அரசு யுத்தம் ஒன்றுக்குத் தயாராகின்றதா என்ற சந்தேகத்தை ஏற்படுத்தியிருப்பதாக புதிய இடதுசாரி முன்னணி தலைமைக்குழு உறுப்பினர் விக்கிரமபாகு கருணாரத்ன தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது -

ஜே.வி.பி, ஹெல உறுமய போன்ற இனவாத பிற்போக்கு (12 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.தே.க புதிய தலைவராக கரு ஜெயசூரிய நியமனம்?



### எதிர்க்கட்சித் தலைவராகவும் இருப்பார்

கொழும்பு —

ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர் பொறுப்பிலிருந்து ரணில் விலகவுள்ள நிலையில்- கட்சியின் புதிய தலைவராக கரு ஜெயசூரிய நியமிக்கப்படுவாரென கட்சியின் உயர்மட்ட பிரமுகர்கள் தெரிவித்தனர்.

ஐக்கிய தேசியக்கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க இது தொடர்பாக கூறுகையில்-

தேர்தல் முடிவுகளை அடுத்து ஐக்கிய தேசியக்கட்சித் தலைவர் மற்றும் நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் பொறுப்பிலிருந்து ரணில் விலகவுள்ளார்.

பிரதித் தலைவரான கரு ஜெயசூரிய கட்சித் தலைவராகவும், பிரதித் தலைவராக சிறையில் உள்ள எஸ்.பி.திஸநாயக்க (12 ஆம் பக்கம் பார்க்க)

## நோர்வே அமைச்சர் சொல்ஹெய்ம் அடுத்தவாரம் இலங்கை வருகிறார்!



கொழும்பு —

புதிய ஜனாதிபதியாக மகிந்த ராஜபக்ஷ பொறுப்பேற்றுள்ள நிலையில் - நோர்வேயின் விசேட தூதுவரும், அந்த நாட்டு அபிவிருத்தி அமைச்சருமான எரிக் சொல்ஹெய்ம் அடுத்த வார ஆரம்பத்தில் இலங்கை வரவுள்ளார்.

சமாதான முயற்சிகளில் தற்போது தோன்றியிருக்கும் நெருக்கடிகள், தடைகளை நீக்கும் நோக்குடனேயே எரிக் சொல்ஹெய்ம் கொழும்பு வரவுள்ளாரென இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுடன் தொடர்புடைய வட்டாரங்கள் தெரிவித்தன.

கொழும்பிலும், கிளிநொச்சியிலும் எரிக் சொல்ஹெய்ம் - அரச மற்றும் புலிகள் தரப்புப் பிரதிநிதிகளுடன் உயர்மட்டப் பேச்சுக்களை நடத்துவார்.

அதேவேளை, புதிய ஜனாதிபதியாகப் பொறுப்பேற்ற மகிந்த ராஜபக்ஷ - போர்நிறுத்தம் தொடருமென அறிவித்துள்ளது குறித்து கண்காணிப்புக்குழுப் பேச்சாளர் ஹெலன் ஓலிவ்ஸ் டோட்ரயர் மகிழ்ச்சி தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறுகையில் -

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அவசரகாலச் சட்டத்தை நீடிப்பதற்கு அரசு முடிவு!

கொழும்பு —

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான புதிய அரசாங்கம் அவசரகாலச் சட்டத்தை நீடிக்கவிருப்பதாகக் கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

எதிர்வரும் 25 ஆம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் விசேட உரைக்குப் பின்னர் அவசரகாலச் சட்ட நீடிப்பு தொடர்பான விவாதம் நடைபெறவுள்ளது.

இந்த முறையும் அவசரகாலச் சட்டம் நீடிக்கப்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம் இருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

கடந்த ஓகஸ்ட் 13ஆம் திகதி வெளிவிவகார அமைச்சராக இருந்த லக்ஷ்மன் கதிர்காமர் கொல்லப்பட்டதையடுத்து அவசரகாலச் சட்டத்தை அப்போதைய ஜனாதிபதி சந்திரிகா பிரகடனம் செய்தார். (12 ஆம் பக்கம் பார்க்க)

EXPOAIR

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்
021-2223891, 2226297, 077-2349999, 011-2372952/3, 011-2360290/1
email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.
Your friend in the skies...

இலங்கையில் முன்னணி வகிக்கும் உங்கள் உள்ளூர் விமான சேவை...

# தொடரும் மழையால் இடம்பெயர்ந்த மக்களுக்கு மனிதநேய அமைப்புகள் உதவ முன்வரவேண்டும்

## தமிழர் புனர்வாழ்வுக்கழகம் அழைப்பு

கிளிநொச்சி

கடந்த சில தினங்களாக தொடர்ச்சியாகப் பெய்துவரும் அடைமழையால் வடகிழக்கில் பல்லாயிரக் கணக்கான மக்கள் வெள்ள அபாயத்தால் இடம்பெயர்ந்து பாடசாலைகள், ஆலயங்களில் தஞ்சமடைந்துள்ளனர். இவர்களுக்கான அவசர மனிதாபிமான உதவிகளை வழங்குவதற்கு அனைத்து தொண்டு நிறுவனங்களையும் தம்முடன் இணைந்து செயற்படுமாறு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் அழைப்பு விடுத்துள்ளது.

கடந்த சில தினங்களாக தொடர்ச்சியாகப் பெய்து வரும் அடைமழையால் குளங்கள் நிரம்பி வான் பாய்வதுடன், வீதிகள் இடிபாடுகளுக்குள் நீரில் மூழ்கியுள்ளன. அத்துடன் சில கிராமங்களுக்கான போக்குவரத்து தடைப்பட்டதுடன் அந்தக் கிராமங்கள் நீரில் மூழ்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

சுனாமியால் பாதிக்கப்பட்டு இடைத்தங்கல் முகாம்களில் வசித்துவரும் மக்கள், போரால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்து தற்காலிகக் குடிசைகளில் வசித்துவரும் மக்களில் மூவாயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன. வடமராட்சி கிழக்கு, முல்லைத்தீவு கரைச்சிக் குடியிருப்பு, புதுக்குடியிருப்பு, கண்டாவளைப் பிரதேசம்,கிளிநொச்சி நகர்ப் பகுதி, முறிகண்டிப் பிரதேசம் ஆகிய பகுதிகளிலிருந்தும் மக்கள் இடம்பெயர்ந்து தற்காலிக முகாம்களில் தங்கியிருக்கின்றனர். இவ்வாறு மட்டக்களப்பு, திருமலை மாவட்டங்களிலும் நூற்றுக்கணக்கான குடும்பங்கள் வெள்ள அபாயத்துக்குள் சிக்குண்டுள்ளன.

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் அனர்த்த முகாமைத்துவப் பிரிவு வெள்ள அபாய இடங்களில் செயற்படத் தொடங்கியுள்ளது.

மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு நகர்த்துதல், இடம் பெயர்ந்த மக்களுக்கு சமைத்த உணவுகளை வழங்குதல், போக்குவரத்து வசதிகள், சுகாதார வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல், பாதிக்கப்பட்ட இடங்களிலுள்ள வெள்ளத்தை மற்றும் தடைகளை நீக்கி வெள்ள அபாயத்தைக் குறைத்தல் ஆகிய பணிகளில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் தொண்டர்கள், பொது நிறுவனங்கள் அத்துடன் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் போராளிகள் ஆகியோர் ஈடுபட்டுள்ளனர்.

இடம் பெயர்ந்த மக்களுக்கு கூரை விரிப்புகள், நில விரிப்புகள், உணவல்லாத பொருட்கள், சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்கான வசதிகள், தற்காலிகமாக அமைக்கக்கூடிய மலசலகூடவசதிகள், உணவு மற்றும் மருத்துவ - சுகாதார குழந்தைகளுக்கும், பெண்களுக்குமான பாவனைப் பொருட்கள் என்பவற்றை தமிழர் புனர்வாழ்வுக்கழகம் வழங்கிவருகிறது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்துடன் பல உள்ளூர் நிறுவனங்கள் பணிபுரிகின்றன.யுனிசெப், சிறுவர் பாதுகாப்பு நிதியம், யு.என்.எச்.சி.ஆர் போன்றனவும் நிவாரணப் பணிகளை வழங்கி வருகின்றன. எனினும் அனைத்து தொண்டு நிறுவனங்களையும் மனிதாபிமான அமைப்புக்களையும் ஒன்றிணைந்து கைகோர்த்துதவுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்து.

# விபத்தில் காயமடைந்த குடும்பஸ்தர் இரு வாரங்களின் பின் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம்

உழவு இயந்திர விபத்தில் காயமடைந்து யாழ்.போதனாவைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வீடுதிரும்பியிருந்த குடும்பஸ்தர் இரு வாரங்களின் பின்னர் நேற்று உயிரிழந்தார்.

அரியாலையைச் சேர்ந்த இராசையா அரசகேசரி (வயது 51) என்பவரே உயிரிழந்தவராவார்.

கடந்த மாதம் எட்டாம் திகதி கிளிநொச்சி கனகபுரத்தில் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தவேளை பின்புறமாக வந்த உழவு இயந்திரம் பிரஸ்தாப நபரை மோதியதில் தாடைப் பகுதியில் பலத்த உட்காயமடைந்தார்.

காயமடைந்த குடும்பஸ்தர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சையின்பின்னர் குணமடைந்து வீடுதிரும்பியிருந்தார்.

நேற்றுக் காலை தாடைப் பகுதியில் வலி ஏற்பட்டதை அடுத்து இவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சில மணிநேரத்தின் பின்னர் உயிரிழந்தார்.

உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனையின் பின்னர் உறவினரிடம் கையளிக்கப்பட்டது.

## கண்டெடுப்பு

யாழ்ப்பாணம்

ராஜா தியேட்டர் வளாகத்தில் கைச்சங்கிலி ஒன்று கண்டெடுக்கப்பட்டு தியேட்டர் முகாமையாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

தவறவிட்டவர்கள் அலுவலக நேரத்தில் நேரில் சென்று ஆதாரம் காட்டி பெற்றுக் கொள்ளுமாறு - முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

## வழிகாட்டல் கருத்தரங்கு

இவ்வருட இறுதியில் நடைபெறவுள்ள இலங்கை அதிபர் சேவை, இலங்கை கல்வி நிர்வாக சேவை, இலங்கை ஆசிரியர் சேவை தரம் - 1 ஆகிய போட்டிப்பரீட்சைக்கான வழிகாட்டல் கருத்தரங்குகள் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் யாழ்ப்பாண மாவட்ட கிளையினரால் எதிர்வரும் 26 ஆம் திகதி நடத்தப்படவுள்ளது.

இந்துக்கல்லூரியில் காலை 9 மணிக்கு ஆரம்பமாக விருக்கும் இந்த வழிகாட்டல் கருத்தரங்கில் கல்வி நிர்வாகம் தொடர்பாக ஓய்வு பெற்ற மேல்மாகாண கல்விப் பணிப்பாளர் எஸ்.நல்லையா கருத்துரை வழங்கவுள்ளார். நுண்ணறிவு விடய ஆய்வு தொடர்பாக கமநல சேவைத் திணைக்களம் வவுனியா மாவட்ட உதவி ஆணையாளர் கே.தெய்வேந்திரம் கருத்துரை வழங்கவுள்ளார். இதுவரை பதிவு செய்யாத ஆசிரியர்களும் கலந்து பயன்பெறலாம். (31)

# வங்கித் தொழில் உதவியாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கான விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம்

வடக்கு- கிழக்கில் மக்கள்வங்கிக் கிளைகளில் நிலவும் வங்கித் தொழில் உதவியாளர் பதவிகளுக்கு பயிலுநர்களை ஆட்சேர்ப்பதற்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், மன்னார், வன்னி, கிளிநொச்சி, முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் உள்ள மக்கள் வங்கிக் கிளைகளில் கடமையாற்றுவதற்கு தமிழ்மொழியில் மிகவும் தேர்ச்சி பெற்றவர்களிடமிருந்து மேற்படி பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரிகள் 30.09. 2005 அன்று 22 வயதுக்கு மேற்படாதவராகவும் க.பொ.த (உயர்தரம்) பரீட்சையில் 3 திறமை சித்திகளையும், க.பொ.த (சாதாரணம்) பரீட்சையில் ஒரே அமர்வில் 6 திறமைச் சித்திகளையும் ஆங்கில மொழி அல்லது கணித பாடத்தில் அதி விசேட சித்தியும் பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் இவ்வாறு சேர்க்கப்படுபவர்கள் குறித்த மாவட்டத்தில் குறைந்தது 5 வருடங்களுக்கு தொடர்ந்து கடமையாற்றுதல் வேண்டும்.

இதற்கான விண்ணப்பப் படிவங்களை மக்கள் வங்கி பிராந்திய தலைமையகத்தில் அல்லது அருகிலுள்ள மக்கள் வங்கிக் கிளையொன்றிலோ பெற்று அடுத்த மாதம் 12 ஆம் திகதிக்கு முன்னர் மக்கள் வங்கி தலைமையலுவலகம், கொழும்பு என்னும் முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும் என யாழ்.பிரதேச முகாமையாளர் தெரிவித்தார்.

# வடமராட்சிகிழக்கில் உணர்வெழுச்சியுடன் நடைபெற்றுவரும் மாவீரர் நாள் நிகழ்வுகள்

வடமராட்சி

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் மாவீரர் எழுச்சிநாள்நிகழ்வுகள் உணர்வெழுச்சியுடன் நடைபெற்றுவருகின்றன. வீதியோரம் இருமருங்கிலும் சிவப்பு மஞ்சள் எழுச்சிக்கொடிகள் நாட்டப்பட்டுள்ளதுடன் வீதிகளில் மாவீரர் நாள் 27 பதாகைகள் ஆங்காங்கு கட்டப்பட்டுள்ளன.

கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களால் ஒவ்வொரு கிராமங்களிலும் மாவீரர் பெற்றோரை கௌரவிக்கும் நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. மாவீரர் பெற்றோரை கௌரவிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் பகல் 1 மணிக்கு செம்பியன் பற்றில் இடம்பெற்றது. இன்று காலை 8.30 மணிக்கு மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வு வத்திராயன் கிராமத்தில் நடைபெறவுள்ளது. வடமராட்சி கிழக்கிலுள்ள மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வு இம்மாதம் 25 ஆம்திகதி வெள்ளிக்கிழமை வத்திராயன் கிராமத்தில் நடைபெறவுள்ளது. (25)

# வடமராட்சி கிழக்குப் பகுதியில் அஞ்சலகங்கள் நீரில் மூழ்கின!

## தபாற் சேவை இரு தினங்களாகப் பாதிப்பு

வடமராட்சி

கடந்த சில தினங்களாக தொடர்ந்து பெய்துவரும் மழை காரணமாக வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் தபாற் சேவை முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

சுண்டிக்குளம், முள்ளியான், ஆழியவளை, தாளையடி, செம்பியன்பற்று உப அஞ்சல் அலுவலகங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. பளை கட்டுப்பாட்டு அஞ்சல் அலுவலகத்தில் இருந்து தாளையடி அஞ்சல் அலுவலகத்திற்கு வரும் மற்றைய அலுவலகங்களுக்குரிய தபாற் பொதிகள் வீதிகளை மூடி மழைநீர் தேங்கியிருப்பதனால் ததபாலோடிகளால் எடுத்துச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த இரண்டு நாட்களாக பொதிகள் பல சிரமங்களுக்கு மத்தியில் தபாலோடிகளால் எடுத்துச் செல்லப்பட்டாலும் கடும் காற்று, கனமழை, வீதிகளை மூடிய வெள்ளம் மக்கள் இடம் பெயர்ந்தமை ஆகிய காரணங்களால் பொதுமக்களுக்குரிய கடிதங்களை விநியோகிப்பதில் அஞ்சற்காரர்கள் பல்வேறு கஷ்டங்களை எதிர்நோக்குகின்றனர். (21)

## அறநெறிப் பாடசாலை பரிசளிப்பு விழா

சாவகச்சேரி

சாவகச்சேரி வாரிவனம் ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தானம் நடத்திவரும் அறநெறிப் பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா எதிர்வரும் வெள்ளிக்கிழமை பி.ப.5 மணிக்கு அறநெறிப் பாடசாலை அதிபர் தலைமையில் ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த வருடம் நவராத்திரி விழாவின்போது நடத்தப்பட்ட ஆத்திசூடி மனனப் போட்டி, கோலம் போடும் போட்டி, மாலைகட்டும் போட்டி ஆகியவற்றில் பங்குபற்றி வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. (31)

## அறிவுறுத்தல் கூட்டம்

சாவகச்சேரி

தரம் 5 புலமைப்பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைக் கொண்ட தென்மராட்சி பாடசாலைகளின் அதிபர்களுக்குரிய ஏ. பி. சி படிவங்களை பெற்று நிரப்புதல் தொடர்பான அறிவுறுத்தல் கூட்டம் நாளை வியாழக் கிழமை பி.ப.2 மணிக்கு தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. இந்தக் கூட்டத்துக்கு தவறாது சமுகமளிக்குமாறு தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் அதிபர்களை கேட்டுள்ளார்.

## சிறுவர் இலக்கிய நூல் வெளியீடு

யாழ்ப்பாணம்

'அரியை மாற்றிய நரியத்தா' சிறுவர் இலக்கிய நூல் வெளியீட்டுவிழா வைத்தீஸ்வராக் கல்லூரி பிரதான மண்டபத்தில் இன்று மாலை 3 மணிக்கு யாழ்.கோட்ட அதிபர் சங்கத் தலைவர் கா.வன்னியசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு யாழ்.வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் என்.வரதராசன் முதன்மை விருந்தினராகவும்,செலிங்கோ நிறுவன நிறைவேற்று அதிகாரி பீ.பிரசாத் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்ளவிருக்கின்றனர்.

யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ பீட சிரேஷ்ட விரிவுரையாளர் இ.இரட்ணம் நூலின் முதல் பிரதியைப் பெறவுள்ளார். (21)

## நாவலர் குருபூசை

யாழ்ப்பாணம்

அகில இலங்கை திருமுறை மன்றம் நடத்தும் நாவலர் குருபூசை நாளை வியாழக்கிழமை காலை 10.30 மணிக்கு நாவலர் கலாசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அகில இலங்கை திருமுறை மன்றம் தெரிவித்துள்ளது.

## நிறுத்தல் அளவைகளுக்கு முத்திரையிடல்

பண்டத்தரிப்பு

வலி.தென் மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட பண்டத்தரிப்பு உப அலுவலகத்தில் நிறுவைகள், அளவைகள் முத்திரையிடும் பணிகள் எதிர்வரும் 29 ஆம் திகதி ஆரம்பமாகி அடுத்தமாதம் ஐந்தாம் திகதிவரை நடைபெறவுள்ளது.

இந்தப் பகுதியைச் சேர்ந்த வியாபாரிகள் நிறுவைகள், அளவைகளுக்கு குறித்த நாட்களில் முத்திரையிடமுடியும் என பண்டத்தரிப்பு உப அலுவலகத்தின் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

நிறைஞ்சனாஸ் சங்கானை
சிறிகாந், ஆர்த்தி அகர்வால் மற்றும் பலர் நடித்த
பம்பரக் கண்ணாலே
காட்சிகள் 11.00, 2.45, 6.00 (புதிய நேரம்)

மனோகரா யாழ்ப்பாணம்
யாழ்.மாவட்டத்தில் முதன்முறையாக 4ஆவது வெற்றி வாரமாக....

DIGITAL dts SOUND
ஒலிநயத்துடன் இளைய தளபதி விஜய் வெடிக்கும்
சிவகாசி
காட்சி நேரம் : (பு.நே) 10.30, 2.30, 6.30, 9.30

நாதன்ஸ் யாழ்ப்பாணம் (குளிரூட்டப்பட்டது)
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதினவெளியீடு
தனுஷ், பிரியாமணி
அது ஒரு கனாக்காலம்
இசை:இளையராஜா
கதைவசனம்:பாலுமகேந்திரா
காட்சிகள்;-10.30, 2.30,6.30, (புதிய நேரம்)

சுன்னாகம் நாகம்ஸ்
பார்த்தீபன், லஷ்சுமிராய், வடிவேல் மற்றும் பலர் நடித்த குண்டக்க மண்டக்க
25 முதல் இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடான
அர்ஜின் நடித்த ஆணை
காட்சிகள்:-11.00,3.00,7.00, 9.30, 1.00 (பு.நே)

ராஜா யாழ்ப்பாணம்
4ஆவது வாரமாக...
விக்ரம், அசின்
மணிவண்ணன், வடிவேல் மற்றும் பலர் நடித்த
மஜா
காட்சிகள்:-10.30,2.30, 6.30, 9.30 (பு.நேரம்)

சிறு விளம்பரம்
மூலிகை மருத்துவம்
குழந்தை இல்லையா? வாதமா? பல் வலியா? ஆஸ்த்துமாவா? குடல் புண்ணா? அனைத்திற்கும் நிரந்தர தீர்வு கண்டு, சுகதேகியாக சிறப்புடன் வாழலாம். சேவை : காலை 9.30 தொடக்கம் மாலை 5.30 வரை. ஞாயிறு, செவ்வாய் விடுமுறையாகும். ஸ்ரீ ராமா கிளினிக், பருத்தித் துறை வீதி, சிவன் கோயிலருகில், நல்லூர்.
(2107)

நமது ஈழநாடு
தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்
நமது ஈழநாடு நடாத்தும் க.பொ.த (சாதாரண தரம்) - 2005 பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் மாணவர்களுக்கான முன்னோடிக் கருத்தரங்கு.
எங்கு? எப்போ? எப்படி?
விபரம் வெகு விரைவில் உங்கள் அபிமான நாளிதழ் நமது ஈழநாடு பத்திரிகையில்....
அனுசரணை வழங்குபவர்கள்:

D.S.I
Show Room,
426, Hospital Road, Jaffna.

S T P
Your Partner in It Solution
73, Palaly Road,
Kantharmadam, Jaffna.

I.D.M
Computer Centere
216, Navalar Road, Jaffna.
Tel: 021 4591398, Fax: 021 4591398
E.mail: idmjaffna@idm.lk,www:idm.lk

kit WESTERN UNION
SRI MURUGAN
Communication & Agency Post Office
303, K.K.S. Road, Jaffna.
T.P: 021 2222670, 5392 Fax: 021 2223214, 3435
Hot line : 0777427182 E.mail:del-smskr@eureka.lk

உங்கள் விலைத் தெரிவுக்கேற்ப
P IV ,P III COMPUTERS
Call us @ 077667108
448,K.K.S ROAD,JAFFNA
MARSHA SYSTEMS

LONDON ENGLISH COLLEGE
105, Arasady Road, Jaffna.
T.P: 021 2225889
தரம் 1-6 வரையான ஆங்கில வகுப்புக்கள்.
தரம் 8 ஆங்கில வகுப்புக்கள்
IELTS O/L, A/L English Literature
Spoken English Diploma in English

YTS
யாழ் ரெக்
இல.3, சேர் பொன் இராமநாதன் வீதி, கலட்டிச்சந்தி.
(யாழ் பல்கலைக்கழகத்திற்கு அண்மையில்)

ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்
212, K.K.S. Road, Jaffna.
T.P: 021 22 5542

# க.பொ.த. [சா.த] பரீட்சை டிசெம்பர் 12 இல் ஆரம்பம்!

கொழும்பு—

கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரண தரப் பரீட்சை அடுத்தமாதம் 12 ஆம் திகதி ஆரம்பமாகி 23 ஆம் திகதி வரை நடைபெறும் என பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இந்தப் பரீட்சையில் தோற்றும் பரீட்சாத்திகளுக்கான அனுமதி அட்டைகள் அடுத்த வாரம் தபாலில் அனுப்பப்படும் என்றும் -

இந்தப் பரீட்சைக்கு 5 லட்சத்து 26 ஆயிரத்து 629 பரீட்சார்த்திகள் தோற்றவிருப்பதாகவும், இவர்களில் 3 லட்சத்து 78 ஆயிரத்து 700 மாணவர்கள் பாடசாலைப் பரீட்சார்த்திகள் என்றும்- பரீட்சை ஆணையாளர் அனுர எதிரிசிங்க தெரிவித்தார்.

## வருடாந்த பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம்—

வடக்கு - கிழக்கு மாகாண அரசாங்க உத்தியோகத்தர் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் வை.எம் சி.மண்டபத்தில் எதிர்வரும் 12 ஆம் திகதி வட மாகாண இணைப்பாளர் இராசக்கோன் தலைமையில் நடைபெறவுள்ளது.

# பொதுக்கட்டமைப்பை தடைசெய்யக்கோரும் வழக்கு மீதான விசாரணை ஒத்திவைப்பு!

கொழும்பு—

சுனாமி நிவாரண பொதுக் கட்டமைப்பை தடைசெய்யுமாறுகோரி தாக்கல் செய்யப்பட்ட வழக்கு மீதான விசாரணையை - ஒத்திவைக்குமாறு உயர் நீதிமன்றில் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சுனாமி பொதுக் கட்டமைப்பை வலுவற்றதாக்கும்படி உத்தரவு பிறப்பிக்குமாறு 39 ஜே.வி.பி நாடாளுமன்ற உறுப்பினர்கள் தாக்கல் செய்த அடிப்படை உரிமை வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது, இத்தகைய கோரிக்கை மனு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கில் பிரதிவாதியான நிவாரண மற்றும் புனர்வாழ்வு அமைச்சின் செயலாளரின் சட்டத்தரணி இந்தக் கோரிக்கையை முன்வைத்தார்.

சுனாமி பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு நிவாரணம் வழங்குவதற்கான அனைத்து முகாமைத்துவ சட்டமூலம் ஒன்று அரசாங்கத்தால் சமர்ப்பிக்கப்பட்டிருப்பதாக அவர் நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டுவந்தார்.

இதனால் சுனாமி பொதுக் கட்டமைப்பு தொடர்பான வழக்கொன்றை விசாரணைசெய்யும் சூழ்நிலை இல்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதையடுத்து நீதியரசர் சரத் என் சில்வா தலைமையிலான நீதிபதிகள் குழுவினர் வழக்கு விசாரணையை ஒத்திவைத்தனர்.

# இரு மொழிகளில் நிர்வாகம் ஆணைக்குழு பரிந்துரை!

கொழும்பு—

இலங்கை முழுமைக்கும் தமிழ் மற்றும் சிங்கள மொழியிலான நிர்வாகத்தை நடைமுறைப் படுத்துமாறு உத்தியோகபூர்வ மொழிகளுக்கான ஆணையகம் வலியுறுத்தியுள்ளது.

இந்த ஆணையத்தின் பரிந்துரைகள் கடந்த 10 ஆம் திகதி ஜனாதிபதியாக இருந்த சந்திரிகா குமாரதுங்கவிடம் கையளிக்கப்பட்டது. இதுதொடர்பாக ஆணைக் குழுத் தலைவர் ராஜா கொளுரே கருத்துத் தெரிவிக்கை யில் -

இங்கு தமிழ் மற்றும் சிங்கள மொழிகள் நிர்வாக மொழிகளாக இருக்கின்றன. இணைப்பு மொழியாக ஆங்கிலம் உள்ளது. வடக்கு - கிழக்கு மாகாணங்களைத் தவிர இதர மாகாணங்களில் சிங்களம் நிர்வாக மொழியாகவும் -

வடக்கு - கிழக்கில் தமிழ் நிர்வாக மொழியாகவும் இருக்க வேண்டும் என்று அரசியல் யாப்பின் சரத்துகள் கூறுகின்றன.

நடைமுறையில் வடக்கு - கிழக்கு தவிர்ந்த ஏனைய பகுதிகளில் வாழ்கின்ற தமிழ் மக்களும், வடக்கு - கிழக்கில் வாழ்கின்ற சிங்கள மக்களும் தத்தமது மொழிகளூடாகச் செயற்பாடுகளை மேற்கொள்ள இது தடையாக உள்ளது.

இதனால், இந்தச் சிக்கலைத் தீர்க்க அரச செயலகங்களில் நிர்வாகத்தில் இரு மொழிக் கொள்கையை நடைமுறைப் படுத்தவேண்டும் என்று வலியுறுத்தியுள்ளோம் என அவர் தெரிவித்தார்.

# ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவில் மாற்றம் செய்கிறார் மகிந்த!




கொழும்பு—

ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவில் இதுவரை பணியாற்றிய பொலிஸ் மற்றும் இராணுவ படைப் பிரிவுகளைச் சேர்ந்த சுமார் ஆயிரம் பேர் இந்த வாரத்தினுள் விலக்கப்பட்டு வேறு இடங்களுக்கு அனுப்பப்படவுள்ளனர்.

இதன் பின்னர் ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவுக்குப் பொறுப்பான அதிகாரியாக பிரதிப் பொலிஸ்மா அதிபர் எஸ்.எம் விக்கிரமசிங்கவும், பணிப்பாளராக பொலிஸ் அதிகாரி கீர்த்தி ராஜபக்ஷவும், பொறுப்பதிகாரியாக பொலிஸ் இன்ஸ்பெக்டர் திலகரட்ணவும் நியமிக்கப்படலாமென கொழும்புச் செய்திகள் தெரிவித்தன. இவர்கள் இதற்கு முன்னர் பிரதமர் பாதுகாப்புப் பிரிவில் பணிபுரிந்தவர்களாவர். இவர்களுடன் தற்போது பணிபுரியும் அதிகாரிகளுட்பட ஆயிரத்திற்கும் அதிகமானோரை ஜனாதிபதி பாதுகாப்புப்பிரிவில் இணைத்துக்கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டது. (தே)

# தொடர்ந்து வீழ்ச்சியடையும் பங்குச் சந்தை சர்வதேச வர்த்தக சமூகம் எச்சரிக்கை!



கொழும்பு—

இலங்கையின் பங்குச்சந்தை வர்த்தகம் தொடர்ந்து வீழ்ச்சியடைந்துவருகிறது. பங்கு வர்த்தகத்தின் சுட்டெண் கடந்த வெள்ளிக்கிழமையைவிட 8 வீதம்வரை வீழ்ச்சியடைந்தது.

அனைத்து கொழும்பு பங்கு வர்த்தகத்தில் சுட்டெண்கள் 166 புள்ளிகளாகவும், மிலங்க பங்கு வர்த்தக சுட்டெண்கள் 250 புள்ளிகளாகவும் வீழ்ந்துள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை பங்கு வர்த்தக வீழ்ச்சியானது 171 புள்ளிகளாகவும், 266 புள்ளிகளாகவும் இருந்தது.

புதிய அரசியல் மாற்றங்களால் இலங்கை பங்குச் சந்தை கடும் வீழ்ச்சியைச் சந்திக்கநேரிடும் என்று சர்வதேச பங்கு வர்த்தக இதழான வேல்ட் ஸ்ட்றீட் ஜேர்னல் செய்தி ஒன்றையும் வெளியிட்டிருந்தது.

வேல்ட் ஸ்ட்றீட் ஜேர்னல் செய்தி விபரம் வருமாறு -

பங்கு வர்த்தகம் எதிர்வரும் தினங்களிலும் 5 முதல் 10 வீதமான வீழ்ச்சியைச் சந்திக்கக் கூடும்.

பங்கு வர்த்தக நிறுவனத்தைச் சேர்ந்த ஆர்.முரளிதரன் கருத்துத் தெரிவிக்கையில் -

அமைதி முயற்சிகளை மகிந்த ராஜபக்ஷ தொடங்கினால் நிலைமை வேறாக மாறும். ஆனால், யுத்தத்தைத் தொடங்கினால் இன்னும் மோசமாக பங்கு வர்த்தகம் வீழ்ச்சியடைந்துவிடும் என்று எச்சரித்தார்.

"எதிர்வரும் நாட்களில் புதிய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மேற்கொள்ளும் ஒவ்வொரு நடவடிக்கையைப் பொறுத்தே பங்கு வர்த்தகத்தின் போக்கு இருக்கும். கடந்த வெள்ளிக்கிழமை பங்கு வர்த்தகம் மிகக் கடுமையான பாதிப்பை எதிர்கொண்டது" என்கிறார் பங்கு வர்த்தகத் துறையைச் சேர்ந்த நரேன் குடமுன்னே.

மேலும் புதிய வரவு - செலவுத் திட்ட அறிக்கையை மகிந்த ராஜபக்ஷ தாக்கல் செய்வதாக அறிவித்துள்ளார். அவரது தேர்தல் அறிக்கையில் கூறப்பட்டுள்ளதுபோல் விவசாயிகளுக்கான சலுகைகள், அரச ஊழியர்களுக்கான ஊதிய உயர்வு பல்வேறு நலத்திட்டங்களைச் செயற்படுத்தினால் தொழில் நிறுவனங்கள் கடுமையான வரி உயர்வைச் சந்திக்க நேரிடும்.

மகிந்த ராஜபக்ஷவை ஆதரிக்கும் ஜே.வி.பியினர், தனியார்மயமாக்கலை அனுமதிக்கமாட்டார்கள். இது முதலீட்டாளர்களைக் காயப்படுத்தும்.

60 வீதத்துக்கும் அதிகமான இலாபம் ஈட்டிய கொழும்பு சந்தை வர்த்தகமானது கடந்த ஒகஸ்டில் தேர்தல் நடைபெறும் என்று உயர்நீதிமன்றம் அறிவித்ததால் 16 வீதமாகக் குறைந்தது. இருப்பினும் முதலீட்டாளர்களுக்கு நம்பிக்கையளிக்கக் கூடிய ரணில் விக்கிரமசிங்க தேர்தலில் வெற்றிபெறுவார் என எதிர்பார்க்கப்பட்டது.

சர்வதேச சந்தையில் இலங்கைசார் பண மதிப்பு 1 அமெரிக்க டொலருக்கு ரூ 99 ஆக இருந்தது. கடந்த வெள்ளிக்கிழமையன்று மகிந்த ராஜபக்ஷ தெரிவான நிலையில் 101.94 ஆக இருந்தது.

இந்த ஆண்டு இறுதிவரை இந்த மதிப்பானது ரூ102.50 இற்கும் ரூ 103 இற்கும் இடையில் இருக்கும் என்றும் வர்த்தக நோக்காளர்கள் கூறுகின்றனர் என வேல்ட் ஸ்ட்றீட் ஜேர்னல் செய்தி தெரிவித்துள்ளது.

# இ.தொ.காவிலிருந்து பைசல் விலகினார்!

கொழும்பு—

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் நாடாளுமன்ற உறுப்பினர் பைசல் முஸ்தபா- தாம் கட்சியில் இருந்து விலகிக் கொள்வதாக அறிவித்துள்ளார்.

இ.தொ.கா செயலாளர் நாயகம் ஆறுமுகன் தொண்டமானுக்கு அவர் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் சகல சமூகங்களைச் சேர்ந்தோரின் அபிலாஷைகளை பிரதிபலிக்கக்கூடிய உண்மையான பிரதிநிதியாக அமைய வேண்டுமென்பது அனைவரினது விருப்பமாகும். இதனால் சிங்கள, முஸ்லிம் மக்களது ஆர்வங்கள் தொடர்பான விருப்பங்களுக்கு தாம் குரல் எழுப்பியதாகவும் -அது சரியான முறையில் செவிமடுக்கப்படவில்லை என்றும் பைசல் முஸ்தபா மேலும் தெரிவித்தார்.

# சிறைகளில் உள்ளோரில் அறுபது வீதம் சிறார்களே!

கொழும்பு—

நாட்டிலுள்ள சிறைச்சாலைகளில் தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்களில் 60 வீதமானோர் சிறுவர்கள் என்றும் - குற்றச் செயல்கள் தொடர்பாக சிறுவர்கள் சிறைக்கு அனுப்பப்படுவது அதிகரித்துவருவதாகவும் அரச சார்பு நிறுவனத்தின் ஆய்வு ஒன்று தெரிவிக்கிறது.

இவர்களில் பெரும்பாலானோர் மீண்டும் குற்றச்செயல்களில் ஈடுபட்டு சிறைக்கு வருபவர்களாக இருப்பதாகவும், அவர்களுக்கான மறுவாழ்வு மையங்கள் இல்லாதிருப்பதே இந்த நிலைக்குக் காரணம் என்றும் அந்த அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த ஆய்வுகூடம் தொடர்பாக நீதித்துறை அமைச்சுக்கு எச்சரிக்கை கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாகவும் இது சமூகத்தில் பாரிய விளைவுகளை ஏற்படுத்தும் என்றும் அந்த அமைப்பின் அறிக்கை தெரிவிக்கின்றது.

# இனப்பிரச்சினையில் தலையிடுவது குறித்து இந்திய அரசாங்கம் ஆராயவேண்டும்!

## இந்திய அரசியல் விமர்சகர் கருத்து

புதுடெல்கி—

எதிர்காலத்தில் இலங்கையின் சமாதான செயற்பாடுகளில் இந்தியா தலையிடுவது தொடர்பில் ஆராய்ந்து பார்க்க வேண்டும் என இந்தியாவின் அரசியல் விமர்சகர் ஒருவர் தெரிவித்தார்.

இந்தியாவின் அரசியல் விமர்சகரான ஏ.பி.மஹாபத்ரா, யு.பி.ஐ.செய்திச் சேவைக்கு வழங்கிய செவ்வியிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

சமாதான செயற்பாடுகள் சீர்குலையாமல் இருக்க இந்தியா இரண்டு தரப்பினரிடமும் இதன் போது கோரிக்கை விடுக்கலாம்.

ஜனாதிபதியாக மகிந்த ராஜபக்ஷ தெரிவுசெய்யப்பட்டமை இந்தியாவுக்கு புதிய சிக்கலை ஏற்படுத்தக்கூடும். எதிர்க்கட்சித் தலைவர் இலங்கையின் இனப்பிரச்சினையைத் தீர்க்கக் கூடிய தலைவர் என இந்தியாவில் பரவலான கருத்து நிலவியது.

மகிந்தவின் பங்காளியான ஜே.வி.பி.யின் நிலைப்பாடுகள் விடுதலைப் புலிகளை சமாதானத்துக்கு இட்டுச்செல்லக்கூடிய வகையில் இல்லை. இந்த நிலையில் இலங்கையின் சமாதான செயற்பாடுகளை முன்னெடுப்பதில் இந்தியாவுக்கு பாரிய பொறுப்பு உள்ளதென்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

# அரச நிறுவனங்களின் தலைமைப்பதவிகள் ரத்து

கொழும்பு—

அரசின் அனைத்து கூட்டுத்தாபனங்கள் மற்றும் சபைகளின் தலைவர்கள், பணிப்பாளர் சபைகளின் பதவிகள் கடந்த 19 ஆம் திகதி முதல் இரத்துச் செய்யப்பட்டுள்ளன.

இந்தப் பதவிகளுக்கான நியமனங்கள் புதிய அமைச்சரவை பதவியேற்ற பின்னர் ஏற்படுத்தப்படுமென அரசாங்கத்தின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். (தே)

# புலிகளுடன் பேச்சு நடத்துவதற்கு மகாநாயக்கர்கள் வேண்டுகோள்!

கொழும்பு—


அனைத்துக் கட்சிகளுடனும் இணைந்து, விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தையை ஆரம்பித்து சமாதானத்தை ஏற்படுத்துவதற்கும் -விவசாயிகளுக்கு நிவாரணங்களை வழங்கி வேலைவாய்ப்பின்மையை நீக்குவதற்கும் முக்கியத்துவம் கொடுக்குமாறு மல்வத்த, அஸ்கிரிய மகாநாயக்கர்கள், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் கேட்டுக்கொண்டுள்ளனர்.

ஐந்தாவது ஜனாதிபதியாகப் பதவியேற்ற மகிந்த ராஜபக்ஷ கடந்த ஞாயிற்றுக்கிழமை தனது குடும்பத்தினருடன் கண்டி தலதா மாளிகைக்குச் சென்று மல்வத்த மற்றும் அஸ்கிரிய பீடாதிபதிகளைச் சந்தித்து கலந்துரையாடியபோதே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

வெற்றிக்காக மற்றைய கட்சிகளுடன் கூட்டணியை அமைத்ததைப்போன்று, கூட்டணியை ஏற்படுத்தாதவர்களையும் ஒன்றிணைத்து, விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி, இனப்பிரச்சினைக்குத் தீர்வைக் கண்டு, நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்தவேண்டும். சமாதானத்தையே இந்த நாட்டு மக்கள் விரும்புகின்றனர் எனவும் அவர்கள் தெரிவித்தனர். (தே)

# பாகிஸ்தான் அணிக்கு எதிராக பெல், பீற்றர்சன் சதமடித்தனர்







பைசலாபாத் —

பாகிஸ்தான் அணிக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் பெல், பீற்றர்சன் ஆகியோர் அடித்த சதத்தின் மூலம் இங்கிலாந்து அணி வலுவான நிலையை எட்டியுள்ளது.

நேற்றுமுன்தினம் ஆட்டநேரமுடிவில் 3 விக்கெட் இழப்புக்கு 113 ஓட்டங்கள் என்ற நிலையிலிருந்த இங்கிலாந்து அணி தொடர்ந்து ஆடியது. பீற்றர்சனும், பெல்லும் அபாரமாக ஆடினர். பெல் நிதானமாக ஓட்டங்களை எடுக்க, பீற்றர்சன் பவுண்டரிகள், சிக்ஸர்களை விளாசினார். இதனால் இங்கிலாந்து அணியின் ஸ்கோர் 261ஐ எட்டியது.

இந்தநிலையில் சொகைப் அக்தரின் பந்துவீச்சில் மொகமட் யூசுப்பிடம் பிடிகொடுத்து பீற்றர்சன் ஆட்டமிழந்தார். இவர் 137 பந்துகளில் 6 பவுண்டரிகள், 3 சிக்ஸர்களுடன் 100 ஓட்டங்களை எடுத்திருந்தார்.

அடுத்து பெல்லுடன் பிளின்ரொப் இணைந்தார். ஆனால், அனைவரதும் எதிர்பார்ப்பைப் பொய்ப்பித்த இவர் - ஒரே ஒரு ஓட்டத்துடன் அக்தரின் பந்துவீச்சில் போல்டாகி வெளியேறினார்.

அடுத்து ஜோன்ஸ் களமிறக்கப்பட்டார். இவர் பெல்லுடன் இணைந்து அபாரமாக ஆடியதால் ஸ்கோர் 300ஐத் தாண்டியது. சதமடித்த பெல் - ஸ்கோர் 327ஆக இருந்தபோது, அப்ரிடியின் பந்துவீச்சில் அக்மலிடம் பிடிகொடுத்து ஆட்டமிழக்க நேரிட்டது. இவர் 272 பந்துகளில் 7 பவுண்டரிகளுடன் 115 ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.

அடுத்து ஜைல்ஸ் களமிறங்க - ஜோன்ஸ் அரைச்சதத்தைக் கடந்தார். ஆனால், 86 பந்துகளில் 8 பவுண்டரிகளுடன் 55 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது இவர் அப்ரிடியின் பந்துவீச்சில் ஆட்டமிழக்க நேரிட்டது.

ஜைல்ஸ் - உடல் ஜோடி இணைந்து ஆடிக்கொண்டிருந்தபோது நேற்றைய ஆட்டம் முடிவுக்கு வந்தது.

ஆட்டநேரமுடிவில் 7 விக்கெட் இழப்புக்கு 391 ஓட்டங்களை இங்கிலாந்து அணி பெற்றிருந்தது. பந்துவீச்சில் அக்தர், நவீட்-உல்-ஹசன், அப்ரிடி ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும், சமி ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

## ஆடுகளத்தைச் சேதப்படுத்தியமை; அப்ரிடிக்கு போட்டித் தடை விதிப்பு!



பைசலாபாத் —

இங்கிலாந்து அணிக்கு எதிரான 2ஆவது டெஸ்ட் போட்டியில் ஆடுகளத்தைச் சேதப்படுத்திய குற்றாச்சாட்டுக்குள்ளாகியிருக்கும் பாகிஸ்தான் வீரர் சயிட் அப்ரிடி - ஒரு டெஸ்ட் மற்றும் 2 ஒருநாள் போட்டிகளில் ஆடத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இவர் ஆடுகளத்தை தனது காலால் சேதப்படுத்தியதாக நடுவர் டரல் கெயார் மற்றும் ட்ரெஸ் கொதிக் ஆகியோர் புகார் செய்திருந்தனர். இதையடுத்து போட்டி நடுவர் மகாநாம விசாரணை மேற்கொண்டபோது - அப்ரிடி தனது தவறை ஒப்புக்கொண்டு மன்னிப்புக் கோரினார். ஆயினும், கிரிக்கெட் விதிகளின்படி ஒரு டெஸ்ட் மற்றும் 2 ஒருநாள் போட்டிகளில் ஆட அப்ரிடிக்குத் தடை விதிக்கப்பட்டது.

விளையாட்டு

## இலங்கை டெஸ்ட் தொடருக்கும் ராவிட்டே இந்திய அணி கப்டன்!



சென்னை —

அடுத்தமாதம் 2ஆம் திகதி சென்னையில் ஆரம்பமாகவுள்ள இலங்கை அணிக்கு எதிரான டெஸ்ட் தொடருக்கான இந்திய அணியில் கப்டனாக ராகுல் ராவிட்டே இருப்பார் என்று இந்திய தேர்வுக்குழு அறிவித்துள்ளது.

இந்திய - தென்னாபிரிக்க அணிகளுக்கிடையே நடந்துவரும் ஒருநாள் போட்டித் தொடரின் அடுத்த 2 போட்டிகளுக்கான வீரர்கள் சென்னையில் இன்று தேர்வு செய்யப்படவுள்ளனர். இதற்காக தேர்வுக் குழுவில் இடம்பெற்றுள்ள 5 பேரும் சென்னை வந்துள்ளனர்.

அத்துடன் அடுத்த மாதம் 2ஆம் திகதி தொடங்கும் இந்திய - இலங்கை டெஸ்ட் போட்டி அணிக்கான வீரர்களும் தேர்வு செய்யப்படுவர்.

நேற்று டெஸ்ட் போட்டிக்கான கப்டன் தேர்வு செய்யப்பட்டார். பெரும்பாலும் கங்கூலியே டெஸ்ட் போட்டிக்கு கப்டனாகத் தேர்ந்தெடுக்கப்படுவார் என்று எதிர்பார்க்கப்பட்டது.

இது தொடர்பாக கிரண் மோரே தலைமையிலான தேர்வுக் குழுவினர் சென்னையில் நேற்று கூடி விவாதம் நடத்தினர்.

இறுதியில் டெஸ்ட் அணிக்கும் ராவிட்டை கப்டனாக அவர்கள் தேர்வு செய்தனர். இதன் மூலம் கங்கூலி டெஸ்ட் அணியின் கப்டன் பதவியில் இருந்தும் நீக்கப்பட்டார்.

நீண்டகாலத் திட்டத்தின் அடிப்படையிலும், ஆழ்ந்த விவாதத்திற்கும் பின்புதான் ராவிட் கப்டனாகத் தேர்வு செய்யப்பட்டதாக கிரிக்கெட் சபை வட்டாரங்கள் தெரிவித்தன. ராவிட் டெஸ்ட் அணியின் கப்டனாகத் தேர்வு செய்யப்பட்டதை இந்திய கிரிக்கெட் சபைச் செயலாளர் எஸ்.கே.நாயர் உத்தியோகபூர்வமாக அறிவித்தார்.

இதனால் ஒருநாள் போட்டியின் கப்டன் பதவி மற்றும் அணியில் இருந்து நீக்கப்பட்ட கங்கூலி டெஸ்ட் அணியிலும் புறக்கணிக்கப்படும் நிலை உருவாகியிருக்கிறது.

## 3ஆவது டெஸ்ட் போட்டிக்கான அவுஸ்ரேலிய அணி அறிவிப்பு!

ஹோபர்ட் —

மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிரான், 3ஆவது டெஸ்ட் போட்டிக்கான அவுஸ்ரேலிய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

சந்தர்போல் தலைமையிலான மேற்கிந்திய கிரிக்கெட் அணி அவுஸ்ரேலியாவில் பயணம் செய்து 3 டெஸ்ட் போட்டிகொண்ட தொடரில் விளையாடிவருகிறது. இதுவரை நடந்த இரண்டு ஆட்டங்களிலும் அவுஸ்ரேலியா வெற்றிபெற்று 2-0 என்ற கணக்கில் தொடரைக் கைப்பற்றிவிட்டது. இந்த நிலையில் இரு அணிகளுக்கிடையிலான 3 ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் அடெலெய்டில் நடைபெறவுள்ளது.

இதற்கான அவுஸ்ரேலிய அணி அறிவிக்கப்பட்டுள்ளது. காயம் காரணமாக கடந்த போட்டிகளில் ஆடாத லாங்கர் மற்றும் மைக்கல் ஹுசே ஆகியோர் அணியில் இடம்பிடித்துள்ளனர். மைக்கல் கிளார்க் இடம்பெறவில்லை.

3 ஆவது போட்டிக்கான அவுஸ்ரேலிய அணி வீரர்கள் விபரம் வருமாறு-

றிக்கி பொண்டிங் (கப்டன்), ஹைடன், லாங்கர், மைக்கல் ஹுசே, பிராட் ஹொக், சைமன்ஸ், கில்கிறிஸ்ட், வோன் பிரெட் லீ, மக்கில், மெக்ரா, பிறாக்கன்.







# கல்விப் பொதுத் தராதரப்பத்திர (சா/த) பரீட்சை -2005 மாதிரி வினாத்தாள்

## கணிதம் பகுதி - I

எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

1) சுருக்குக.

I) 1/2 + 2/3 II) 4.2 - 2.39


2) I) $\sqrt{X}$ என்பதைச் சுட்டி வடிவில் தருக.

II) $\sqrt{(4^3)}$ என்பதன் பெறுமானம் காண்க.

3) I) 3/5 ஐ தசம பின்னமாக எழுதுக.

II) 0.27 என்பதைச் சாதாரண பின்னத்தில் தருக.

4) உரு I இல் AB,CD என்ற நேர்கோடுகள் T இல் இடைவெட்டுகின்றன. X,Y என்பவற்றின் பெறுமானங்களைக் காண்க.



உரு I

5) 6 - x - $x^2$ என்பதை இரு காரணிகளின் பெருக்கமாகத் தருக.

6) ஒரு வகுப்பில் 23 ஆண்களும், 17 பெண்களும் உள்ளனர்.

I) பெண்களுக்கும், ஆண்களுக்கும் இடையிலான விகிதத்தை எழுதுக.

II) ஆண்களின் எண்ணிக்கையை வகுப்பிலுள்ள மொத்தமாணவர்களின் சதவீதமாக எழுதுக.

7) சுருக்குக

$\frac{2}{x+2} - 1$

8) முக்கோணி ABC இல் AB = 6cm, BC = 7cm, AC=9cm ஆகும். முக்கோணியை அமைக்காமல், கோணங்களின் பருமனைக் கருத்தில் கொண்டு, இது எவ்வகை முக்கோணி என்பதைக் காண்க.

9) ஒன்று ரூபா 5 வீதம் x பென்சில்களை வாங்கி, ரூபா y பெறுமதியான காசுத்தாளை கொடுத்தபோது பெறப்படும் மீதிப் பணத்திற்கான கோவையை எழுதுக.

10) தீர்க்குக.
8 - 3a = 1/2

11) $2310_{\text{நான்கு}}$ என்பதில் இலக்கம் 2 இன் பெறுமானம், இலக்கம் 1 இன் பெறுமானத்தின் எத்தனை மடங்கு என்பதை அடி பத்தில் தருக.


12) 5 மனிதர் நாளொன்றுக்கு 8 மணித்தியாலம் வேலை செய்து, 9 நாட்களில் ஒரு வேலையைச் செய்து முடிக்கலாம்.

(i) இவ்வேலையின் அளவை மனித மணித்தியாலத்தில் காண்க.

(ii) இவ்வேலையை மூன்று நாட்களில் முடிக்கவேண்டியுள்ளது. இதற்காக 12 மனிதர்களை ஈடுபடுத்தினால் அவர்கள் நாளொன்றுக்கு எத்தனை மணித்தியாலங்கள் வேலை செய்ய வேண்டும்.


13) இரு வட்டங்களின் ஆரைகளின் விகிதம் 2:3 ஆகும். இவ்வட்டங்களின் பரப்பளவுகளின் விகிதத்தைக் காண்க.

14) வென்வரிப்படத்தில் நிழற்றப்பட்ட பகுதியை தொடைக் குறியீட்டில் எழுதுக.




உரு II

15) குறித்த பொருள் ஒன்றுக்கு விற்பனையின் போது 8% கழிவு கொடுக்கப்பட்டு, ரூ.750 இற்கு விற்கப்படுகிறது. இவ்விற்பனையில் 5% இலாபம் கிடைத்தால் கொள்விலையையும், குறித்த விலையையும் காண்க.





16) 12x, 6ax, $9x^2$ என்பவற்றின்
(i) பொதுக் காரணிகளுள் பெரியதைக் காண்க.
(ii) பொது மடங்குகளுள் சிறியதைக் காண்க.

17) உரு III இல் காணப்படும் அரியத்தின் குறுக்குவெட்டானது நிழற்றப்பட்டுள்ளது. அக்குறுக்குவெட்டுப் பரப்பளவு $7Cm^2$ ஆகும். அரியத்தின் நீளம் 10Cm ஆயின் அதன் கனவளவு யாது?


உரு III

18) (i) பல்கோணியின் புறக்கோணங்களின் கூட்டுத்தொகை எத்தனை பாகை?
(ii) புறக்கோணமொன்றின் பெறுமானம் 30° ஆகவுள்ள ஒழுங்கான பல்கோணியொன்றில் எத்தனை பக்கங்கள் உள்ளன?

19) உரு IV இல்




உரு IV

(i) $A\hat{B}C + A\hat{C}B$ இற்குச் சமனான கோணத்தை எழுதுக?

(ii) $B\hat{A}D + A\hat{D}E$ இன் பெறுமானத்தை பாகையில் தருக?

20) ஒருவரது ஆண்டு வருமானத்தின் முதல் ரூ 35,000 இற்கு வருமான வரி அறவிடப்படுவதில்லை. இதற்கு மேற்பட்ட தொகைக்கு அத் தொகையின் 10% வருமான வரியாக அறவிடப்படுகிறது. வியாபாரி ஒருவர் குறிப்பிட்ட வருடத்தில் செலுத்திய வருமான வரி ரூ 5440 ஆயின், அவரது ஆண்டு வருமானம் எவ்வளவு?


21) கோடாத நான்முகித் தாயக்கட்டையொன்று இரு தடவைகள் எறியப்பட்டபோது, தாயக்கட்டையின் கீழ் முகத்தில் காணப்படும் எண்களுக்கான மாதிரி வெளியானது உரு V இல் காட்டப்பட்டுள்ளன. அதில் குறிக்கப்படும் தொடைகள் என்பவற்றில் தம்முள் புறநீக்கமான நிகழ்ச்சிகளைக்கொண்ட தொடைச்சோடியை எழுதுக?



உரு V

22) $மட_{10}5 = 0.6990$ ஆயின் $மட_{10}1/0.5$ இன் பெறுமானம் காண்க.

23) ஆண்டுக்கு 22% எளிய வட்டிப்படி கடனாகப்பெற்ற ரூ 4000 இற்கு 3 ஆண்டுகளுக்கான எளிய வட்டியைக் காண்க.



உரு VI

24) உரு VI இல் AB ஆனது வட்டத்தின் விட்டமாகும். $B\hat{A}C = 35^0$ எனின் $A\hat{M}C$ இன் பெறுமானம் காண்க.

# கல்விப் பொதுத் தராதரப்பத்திர (சா/த) பரீட்சை –2005 மாதிரி வினாத்தாள்

25) (i) $A = 4\pi r^2$ என்பதில் r ஐ எழுதுக.


(ii) $A = 4\pi r^2$ இல் $A = 48$, $\pi = 3$ ஆயின் r இன் பெறுமானம் யாது?

26) $3x - 2 > 4$ இல் x இன் எல்லைப்பெறுமானம் எவ்வளவு?

27) உரு 7 இல் ABCD என்பது வட்ட நாற்பக்கல்

(i) $\hat{A} + \hat{C}$ இன் பெறுமானத்தை பாகைகளில் காண்க.


(ii) $\hat{A} + \hat{C} = \hat{B} + \hat{D}$ எனக் காட்டுக.




உரு VII

28) X = 3, Y = 2x - 1 என்பதால் குறிக்கப்படும் இரு நேர்கோடுகளும், வெட்டும் புள்ளியின் ஆள்கூறுகளையும் எழுதுக?

29) உரு VIII இல் O என்பது உருப்பெருக்க மையம் ABC இனது உருப்பெருக்க விம்பம் $A_1B_1C_1$ ஆகும். $OA = AA_1$ ஆயின்





உரு VIII

(i) உருப்பெருக்கத்தின் அளவிடைக்காரணி காண்க.

(ii) AB = 5Cm ஆயின் $A_1B_1$ இன் நீளத்தைக் காண்க.

30) உரு IX இல் AB//DC ஆகும். AC, BD நேர்கோடுகள் O இல் வெட்டுகின்றன. AO = 4Cm, OC = 5Cm, OB = 6Cm ஆகும்.




உரு IX

(i) $\frac{BO}{OD}$ க்குச் சமனான விகிதமொன்றை எழுதுக.
(ii) x இன் பெறுமானத்தைக் காண்க.

அ) அதிக எண்ணிக்கையானோர் எந்தக் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள்?

ஆ) 50 வயதுக்கு மேற்பட்டோர் மொத்த எண்ணிக்கையின் என்ன சதவீதம்?

இ) 33-41 என்ற வகுப்பாயிடையின் நடுப்பெறுமானத்தை எடுகொண்ட இடையாகக் கொண்டு இடையைக் கணிக்க?


05. கூட்டல் விருத்தி ஒன்றின் n ஆவது உறுப்பு 8-3 n ஆகும் இந்த விருத்தியின்

அ) முதல் மூன்று உறுப்புக்களையும் காண்க?


ஆ) -28 எத்தனையாவது உறுப்பாகும்?

இ) $T_3=11$, $T_7=23$ இன் தொடரைக் காண்க?

06. தரப்பட்ட உருவில் $A\hat{D}B=29^0$, $A\hat{C}B=43^0\,10$ CD=30M ஆயின் h,x ஆகியவற்றைக் கணிக்க?





07. அளக்கப்பட்ட காணித்துண்டு ஒன்றுக்காக வரையப்பட்ட கிடைப் படம் இங்கே காட்டப்படுகிறது. எல்லா அளவீடுகளும் மீற்றரில் தரப் பட்டுள்ளன




அ) வெளிக்களப் புத்தகக் குறிப்பை எழுதுக?

ஆ) காணியின் பரப்பளவைக் காண்க?

08.




அ) வட்ட நாற்பக்கலின் புறக்கோணமானது அகத்தெதிர் கோணத்துக்குச் சமனாகும் என நிறுவுக?

ஆ) தரப்பட்ட உருவில் AG ஆனது $B\hat{A}D$ ஐ இரு கூறிடுகிறது.

CF ஆனது $B\hat{C}E$ஐ இரு கூறிடுமென நிறுவுக?

09. கைக் காசுக்கு ரூ 7500 விலையுள்ள சைக்கிள் ஒன்றை முதலில் ரூபா 3500 செலுத்தி, மீதியை 24% வருட வட்டிப்படி வாடகைக் கொள்வனவு முறையில் 4 சமமான மாதாந்தத் தவணைக் கட்டணங்களாகச் செலுத்திக் கொள்வனவு செய்யலாம். தவணைக் கட்டணமொன்றின் பெறுமானத்தைக் காண்க?

## பகுதி – II

01. அ) காரணிப்படுத்துக $27-8a^3$

ஆ) தீர்க்க $1/x + 1/y = 7$
$3/x + 2/y = 13$

இ) இரு தசமதானங்களுக்குத் திருத்தமாக விடை தருக? $x^2+4x+1=0$

02. அ) தீர்க்க $4^{x+1}=32$

ஆ) மடக்கை அட்டவணையைப் பயன்படுத்தாது பெறுமானங் காண்க?
$3\log x+2\log 2 = 5\log 2+ 3\log 2$

இ) மடக்கை அட்டவணையைப் பயன்படுத்தாது பெறுமானங் காண்க?
$$\frac{0.2653x\sqrt{2.872}}{0.0538}$$

03. அ) $-4\le x \le 2$ என்ற ஆட்சியில் $y=x^2+2x^{-3}$ என்ற சமன்பாட்டை வரைபு படுத்துக?

ஆ) சமச்சீரச்சின் சமன்பாட்டை எழுதுக?
இ) இழிவுப் புள்ளியின் ஆள்கூறை எழுதுக?
ஈ) இந்த வரைபிலிருந்து $\sqrt{3}$ இன் பெறுமானத்தைக் காண்க?
உ) இந்த வரைபைப் பயன்படுத்தி $x^2+2x-5=0$ஐத் தீர்க்க?

04. குறித்த ஒரு நாளில் மருத்துவ நிலையமொன்றுக்கு சிகிச்சை பெற வந்தவர்களின் எண்ணிக்கை வயதுக்கேற்ப கூட்டமாக்கப்பட்டு, உரிய தகவல் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

| வயது (ஆண்டில்) | 6-14 | 15-14 | 24-32 | 33-41 | 42-50 | 51-59 | 60-68 |
|---|---|---|---|---|---|---|---|
| சிகிச்சை பெற்றவர்களின் எண்ணிக்கை | 5 | 12 | 15 | 20 | 18 | 15 | 5 |

ஆசிரியர்:-
S.K.சுந்தர்.

சட்டவிரோதமான முறையில்

# திண்மக் கழிவுகளை ஏற்றிவந்து கொட்டும் வாகனங்கள் குறித்த தகவல்தரக் கோரிக்கை

ஆனைக்கோட்டை —

காக்கைதீவு, மற்றும் ஆனைக்கோட்டைப் பகுதியில் தேவையற்ற முறையில் கொட்டப்படுகின்ற திண்மக் கழிவுகளை முறையான விதத்தில் கொட்டுமாறும், அவ்வாறு முறையற்ற விதத்தில் கொட்டுபவர்கள் இனங்காணப்பட்டால், அவர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.

அண்மைக்காலமாக மேற்குறிப்பிட்ட இடங்களில் கொட்டப்படுகின்ற திண்மக்கழிவுகளால் அந்தப் பிரதேசங்களில் துர்நாற்றம் வீசுகிறது. இதனால் பல்வேறு சுகாதாரப் பிரச்சினைகள் ஏற்படுவதுடன், மக்கள் பல அசௌகரியங்களுக்கும் உள்ளாகின்றனர்.

அத்துடன், இந்தப் பகுதியில் கொட்டப்படும் திண்மக் கழிவுகள் தொடர்பாக - யாழ். மாநகரசபை மற்றும் யாழ். பிரதேச செயலகம் போன்றவற்றுக்குக் கடிதம் மூலம் குப்பைக் கழிவுகள் முறையான விதத்தில் கொட்டுமாறு கூறப்பட்டது.

எனினும், இவற்றைத் தாம் அப்பகுதியில் கொட்டவில்லையென்றும், தனியார் நிறுவனங்களே கொட்டுவதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

எனவே, இதைச் சரியான ஒழுங்குமுறைக்குக் கொண்டுவருவதற்காக அந்தப் பகுதியைச் சேர்ந்த மக்கள் சட்டவிரோதமான முறையில் குப்பைகளைக் கொண்டுவந்து கொட்டுகின்ற வாகன இலக்கங்களைப் பதிவு செய்து பிரதேச செயலகத்துக்கு அறிவிக்குமாறு அவர் மேலும் கேட்டுள்ளார்.

# அடிப்படை வசதிகளின்றி அவதிப்படும் ஊரி, பட்டியெல்லை, பாலாவோடை மக்கள்

காரைநகர் —

காரைநகர் கிழக்குப் பிரதேச மக்கள் ஒழுங்கான வீதி, மின்சாரம் ஆகிய அடிப்படைத் தேவைகள் இன்றி அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஊரி, பட்டியெல்லை, பாலாவோடை, தோப்புக்காடு ஆகிய நான்கு கிராமங்களுக்குக் கடந்த பல வருடங்களாக மின்சார வசதிகள் ஏற்படுத்தப்படவில்லை. அத்துடன் இந்தக் கிராமங்களுக்கான உள் வீதிகளும் நீண்ட காலமாகப் புனரமைக்கப்படாமல் உள்ளன.

பாடசாலைகள், சிறுவர் பகல் பராமரிப்பு இல்லம், பொது அமைப்புகள் என இங்கு உள்ளதுடன் இந்தக் கிராமங்களில் சுமார் 800 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றனர். நீண்டகாலமாக வீதிகள் புனரமைக்கப்படாமையால் வீதிகளில் குழிகள் தோன்றியுள்ளதுடன், இவற்றில் மழை நீர் தேங்கி போக்குவரத்துக்குப் பெரும் சிரமமாகவுள்ளதெனவும் கிராம மக்கள் மேலும் தெரிவித்தனர்.

மின்சார வசதியை ஏற்படுத்துவதற்கும், வீதி புனரமைப்புக்குமென சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் பலமுறை எழுத்து மூலமாக தெரிவித்தும், இதுவரை எந்தவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் மக்கள் விசனம் தெரிவித்தனர்.

# தொலைபேசி இணைப்பு வழங்குமாறு கோரிக்கை

கோப்பாய் —

கோப்பாய் அரசினர் வைத்தியசாலைக்கு தொலைபேசி இணைப்பின்றி வைத்தியசாலைச் சமூகத்தினர் - மக்களுக்கு சேவையாற்றுவதில் பல்வேறுபட்ட சிக்கல்களை எதிர்நோக்குகின்றனர்.

இந்த வைத்தியசாலைக்குத் தொலைபேசி இணைப்பு வழங்குவதாக பிரதி மாகாண சுகாதாரப் பணிப்பாளர் கடந்த காலங்களில் உறுதியளித்திருந்தும், இதுவரை இணைப்பு வழங்கப்படவில்லை.

எனவே கோப்பாய் அரசினர் வைத்தியசாலைக்கு தொலைபேசி இணைப்பை விரைவாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு வைத்தியசாலைச் சமூகத்தினரும், பிரதேச மக்களும் கோரிக்கை விடுத்துள்ளனர். (90)

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோரின் விபரங்கள் சேகரிக்கப்படுகின்றன!

யாழ்ப்பாணம் —

யாழ்.குடாநாட்டில் பெய்து வரும் கடும் மழையால் ஏற்பட்டிருக்கும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் விபரங்களைப் பிரதேச செயலர் பிரிவு ரீதியாக திரட்டி வருவதாக யாழ்.மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி தெரிவித்தார்.

யாழ்.குடாநாட்டில் ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலும், வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்து பொது இடங்கள், உறவினர், நண்பர்கள் வீடுகளில் தங்கியுள்ள குடும்பங்கள் தொடர்பான விபரங்கள், வெள்ளத்தால் சேதமடைந்த வீடுகளின் விபரங்கள் போன்றன அந்தந்த கிராம அலுவலர்களால் பிரிவுகள் ரீதியாகத் திரட்டப்படுகின்றன.

தற்போது இடம்பெயர்ந்து தங்கியுள்ள குடும்பங்களுக்கு தேவையான உணவுவகைகள் மற்றும் ஏனைய உதவிப் பொருட்கள் வழங்கவும் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## யூனியன் கல்லூரிக்கு மாடிக் கட்டடம்

தெல்லிப்பளை —

தெல்லிப்பளை யூனியன் கல்லூரிக்கு நிகொட் நிறுவனத்தால் இரண்டு மாடிக் கட்டடங்கள் இரண்டு தொகுதிகளாகக் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது.

விஞ்ஞான ஆய்வுகூடம், நூலகம், கணினி அறை, அதிபர் அலுவலகம் உள்ளடக்கிய கட்டடத் தொகுதியே நிகொட் நிறுவனத்தால் கட்டிமுடிக்கப்பட்டு, அண்மையில் பாடசாலைச் சமூகத்திடம் கையளிக்கப்பட்டுள்ளன. இந்தக் கல்லூரி அதி உயர் பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்தச் செயற்திட்டம் நிகொட்டின் 12 மில்லியன் ரூபா நிதியுதவி மூலம் அமைக்கப்பட்டதாக யாழ்.மாவட்ட நிகொட் திட்டமிடல் பணிப்பாளர் நவரட்ணராஜா தெரிவித்தார்.

## அபிவிருத்திப் பணிகள் நிறைவு

அச்சுவேலி —

இந்த ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத்திட்ட வேலைகளில், வலி.கிழக்குப் பிரதேசசபையிடம் ஒப்படைக்கப்பட்ட அபிவிருத்திப் பணிகளில், பெரும்பாலானவை பூர்த்தியடைந்துவிட்டதாக வலி.கிழக்கு பிரதேச சபையினர் தெரிவித்தனர்.

வலி.கிழக்கு பிரதேச சபையிடம் 39 வேலைத்திட்டங்கள் ஒப்படைக்கப்பட்டிருந்தது. இவற்றில் 24 வேலைத்திட்டங்கள் தற்போது பூர்த்தியடைந்துள்ளன. மிகுதி 13 வேலைகளும் தற்போது வெற்றிகரமாக நடைபெற்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (90)


## இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

அகவை இரண்டு



பெயர் : சு.தனுஷ்
முகவரி : லண்டன்.

அகவை ஐந்து



பெயர் : நா.அருண்
முகவரி : சரசாலை.

அகவை ஏழு



பெயர் : ஜெ.லக்ஷனன்
முகவரி : நயினாதீவு.



பெயர் : நா.ஜனனி
முகவரி : சரசாலை

வாழ்க வளமுடன்





மாவீரர் நாள் நவம்பர் 27

# போற்றப்படவேண்டிய பண்பாடாகட்டும்



எமது தாயகமாம் தமிழீழ நாட்டின் தேசிய நாட்களில் மாவீரர் நாள் மிக முக்கியமானதாகும். மாவீரர் நாள் என்பது தமிழீழத்தின் விடிவிற்காகவும், உயர்விற்காகவும் உழைத்து உயிரைத் தற்கொடையாக ஈர்ந்து, இந்த மண்ணுக்கே உரமாகி விட்டவர்களினதும், எமது மூச்சுடன் கலந்துவிட்டவர்களினதுமாகிய நினைவு நாளாகும்.

உங்கள் உயிரிலும் மேலான குழந்தைகளும், எமது சக போராளிகளுமான இந்த மாவீரர்களின் தியாகம், அவர்களின் உணர்வுகள், இலட்சிய தாகம், கனவுகள் என்பன எம்மால் மறக்கப்பட முடியாதவையாகும். புனிதத் தன்மை வாய்ந்ததுமாகும். காலம் காலமாக நினைவுகூர்ந்து, என்றும் போற்றப்படவேண்டியவையாகும்.

இந்த மாவீரர்களின் நினைவுகள் என்றும் எம்மை வழிநடத்தும் உந்து சக்தியாக இருக்கும். மாவீரர்களது இத்தகைய நினைவுகூரல் என்பது ஒரு நிகழ்வாக இருந்துவிடாது, எமது நாட்டு மக்களின் வரலாற்றுச் சுவடியாகவும், பண்பாட்டுக்குரியவையாகவும் வளர்ந்து வரவேண்டும்.

இந்த எமக்குரிய உயரிய நிகழ்வைத் தத்துவார்த்தமாகவும், உணர்வு பூர்வமாகவும் நிலைநாட்டுவதற்காக எமது தமிழீழ மக்கள் அனைவரினதும் மனமுவந்த, ஒருங்கிணைந்த பங்களிப்புகளை வேண்டி நிற்கின்றோம்.

மாவீரர் பணிமனை.

# இராணுவத்தினரின் தொடர் மண் அகழ்வால் கடல் நீர் குடிமனைகளுக்குள் புகும் அபாயம்!

சுழிபுரம் —

சுழிபுரம் திருவடி நிலை பகுதியில் இராணுவத்தினர் தொடர்ச்சியாக மண் அகழ்ந்து வருவதால் நன்னீர்ப் பகுதிகளில் உவர் நீர் உட்புகுந்துள்ளதாக சுழிபுரம் கடற்தொழிலாளர் சங்கத்தின் பிரதிநிதிகள், யாழ். கடற்தொழிலாளர் சங்கங்களின் சம்மேளனத்திடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

சுழிபுரம் பகுதியில் கடந்த வருடம் ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தால் கரையோரப் பகுதிகள் பாதிக்கப்பட்டன. இதனைத் தொடர்ந்து தற்போது இந்தக் கடற்கரைப் பகுதிகளிலிருந்து இராணுவத்தினர் பெருந்தொகையாக மண் அகழ்ந்து வருகின்றனர். இதனால் கடலரிப்பு ஏற்பட்டு உவர்நீர் குடிமனைகளுக்குள் உட்புகும் நிலை ஏற்பட்டுள்ளது.

இதைவிட இராணுவத்தினர் வெட்டிய பதுங்கு குழிகளின் மூலமாக உவர்நீர் வயல் நிலங்களுக்கு உட்புகுந்து வயல் நிலங்கள் உவர்த் தன்மை கொண்டதாக மாறிவருகின்றது.

இந்த விடயம் தொடர்பாக இராணுவத்தினர், யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் ஆகியோருக்கு தெரிவித்தபோதும், இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

தற்போது பெய்துவரும் கடும் மழை காரணமாக தமது கிராமம் பேரிழப்பைச் சந்தித்துள்ளதெனவும் கடற்தொழிலாளர் சங்கம் முறையிட்டுள்ளது.

இதேவேளை - காரைநகர், மாதகல் போன்ற பகுதிகளிலும் தொடர்ச்சியாகப் பெய்துவரும் மழை காரணமாக சுனாமி அலை கிராமங்களுக்கு உட்சென்ற பகுதியூடாக கடல் பெருக்கெடுத்து வருகிறது.

எனவே, உடன் தடுப்புச் சுவர் அமைக்கப்பட வேண்டும் எனவும் - புதிய தொழிலாளர்களுக்கு இராணுவத்தினர் மீன் பிடிக்க பாஸ்அனுமதியை வழங்கவில்லை எனவும், கரையோரப் பகுதிகளில் வாடி போன்ற கட்டடங்களை அமைக்க தொடர்ந்தும் இராணுவத்தினர் அனுமதி மறுத்து வருவதாகவும், இந்தச் சங் கங்களின் பிரதிநிதிகள் - யாழ். மீனவ சம்மேளனத்திடம் முறையிட்டுள்ளனர்.

# மாவீரர் தூபி நாளை திறப்பு

யாழ்ப்பாணம் —

யாழ்.பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டுள்ள மாவீரர் நினைவுத் தூபி - நாளை காலை 10 மணிக்குத் திறந்து வைக்கப் படவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கின் முன்பாக பல்கலைக்கழக சமூகத்தால் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. மாவீரர்களது தேசிய விடுதலையைக் குறித்து நிற்கும் இந்த மாவீரர் நினைவுத் தூபியானது, மாவீரர் எழுச்சி நாளின் ஆரம்பமான நாளை திறந்துவைக்கப்படவுள்ளது.

இந்த நினைவுத் தூபியைத் திறந்துவைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பப்பட்டு வருவதாக யாழ்.பல்கலைக்கழக சமூகம் தெரிவித்துள்ளது.

# வடமராட்சியில் கரைசேர்ந்த மூன்று தமிழக மீனவர்கள்

பருத்தித்துறை —

தமிழகத்தைச் சேர்ந்த மூன்று மீனவர்கள் சீரற்ற காலநிலையால் வழிதவறி வடமராட்சி - வியாபாரிமூலை கடற்பரப்பில் கரையொதுங்கினர்.

நேற்றுமுன்தினம் காலை 10 மணியளவில் இன்பருட்டி கரையிலிருந்து சுமார் 1 மைல் தூரத்தில் படகொன்று கடலில் தத்தளித்துக்கொண்டிருப்பதைக் கண்ட இன்பருட்டி மீனவர்கள் இயந்திரப் படகில் சென்று படகையும் மீனவர்களையும் மீட்டு வந்தனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை தமிழ்நாடு நாகபட்டினத்திலிருந்து கடற்தொழிலுக்காக புறப்பட்ட தாங்கள் கோடியாக்கரையில் தொழிலில் ஈடுபட்டிருந்த போது - தமது படகின் இயந்திரம் பழுதடைந்த நிலையில் கடலில் ஏற்பட்ட கடும் கொந்தளிப்பு காரணமாக அடித்து வரப்பட்டதாக, கரைசேர்ந்த மீனவர்கள தெரிவித்தனர்.

இதேவேளை, தம்முடன் தொழிலில் ஈடுபட்டிருந்த இன்னொரு படகின் நிலை பற்றித் தெரியவில்லை என்றும் அவர்கள் குறிப்பிட்டனர்.

நாகபட்டினம் - நம்பியார் நகரைச்சேர்ந்த இடும்பன் தண்டாயுதம் (வயது 45), முத்தையன் முத்துச்சாமி (வயது 46), முத்தையன் பழனிவேல் (வயது 35) ஆகியோரே மீன்பிடிவலைகளை இழந்தநிலையில் படகுடன் கரைசேர்ந்தவர்களாவார்.

மனிதாபிமான அடிப்படையில் இன்பருட்டி கடற்தொழிலாளர் சங்கம் இவர்களைக் காப்பாற்றி உணவு கொடுத்து தங்க வைத்துள்ளனர். அவர்களை தாயகம் திருப்பி அனுப்புவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரியவருகிறது. இது தொடர்பாக வடமராட்சி வடக்கு கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கச் சமாசம் மனித உரிமைகள் ஆணைக்குழு, கண்காணிப்புக் குழு என்பவற்றின் கவனத்துக்கு கொண்டுவந்துள்ளது. (14, 12)

# மாவீரர்களின் உன்னத தியாகங்களை நினைவு கூர முன்வர வேண்டும்!

## - கிளிநொச்சி அரசியற்துறைப் பொறுப்பாளர் -

கிளிநொச்சி—

மாவீரர்களின் உன்னத தியாகங்களையும், இலட்சியத்தின் மீது கொண்ட பற்றுறுதியையும் நாம் என்றும் நினைவுகூருவோம் என கிளிநொச்சி மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் கலைவாணன் தெரிவித்தார்.

கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற மாவீரர் நாள் ஏற்பாட்டுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்-

கிளிநொச்சி நகரப் பகுதியிலும், ஏனைய மாவட்ட பிரதேசங்களிலும் இன்று முன்னேற்றம் கண்டு வருவதற்கு வித்திட்டவர்கள் இந்த மாவீரர்கள். இவர்களது தியாக சிந்தனை, இலட்சியப்பற்று முதலானவை என்றுமே எம் நெஞ்சை விட்டு அகலாது.

இந்த வேளையில் மாவீரர் தின நிகழ்வுகளை மக்களாகிய நீங்கள் உன்னத நோக்குடன் சிறப்பாகவும், உணர்வு பூர்வமாகவும் அனுஷ்டிக்க முன்வரவேண்டும்.

இந்த வகையில் ஒன்றுதிரண்டுள்ள நீங்கள் வேலைத்திட்டங்களை நல்லமுறையிலே முன்னெடுத்து, இந்த நாளைச் சிறப்பாக்க முன்வரவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

கிளிநொச்சி பிரதேச அரசியற்துறைப் பொறுப்பாளர் போர்ப்பிரியன்தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில்-கிளிநொச்சி மாவட்ட அரசியற்துறைதுணைப் பொறுப்பாளர் அருள் மற்றும் கிளிநொச்சி பிரதேசத்திலிருந்து நூற்றுக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர். இந்த நிகழ்வில் கிளிநொச்சி பிரதேசத்துக்கான மாவீரர் செயற்பாட்டுக்குழு, உருத்திரபுரம் பிரதேச செயற்பாட்டுக்குழு ஆகியனதெரிவுசெய்யப்பட்டன.

## புதுக்குளம் - செட்டிக்குளம் பகுதியில் மாவீரர்களின் பெற்றோர் கௌரவிப்பு

வவுனியா—

மாவீரர்நாளை முன்னிட்டு வவுனியா மாவட்டத்தில் இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதியில் அமைந்திருக்கும் புதுக்குளம் மற்றும் செட்டிக்குளம் பிரதேசங்களில் வசிக்கும் மாவீரர்களின் பெற்றோர் கௌரவிப்பு கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வினோ.நோகராதலிங்கம், தமிழ்த் தேசிய எழுச்சிப் பேரவையின் செயலாளர் எஸ்.என்.ஜி. நாதன், ஏற்பாட்டுக் குழுவின் பிரமுகரான ஜெயச்சந்திரன் மற்றும் பொது அமைப்புகளின் முதன்மை உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப் பெருமளவானோர் கலந்துகொண்டனர்.

புதுக்குளம் சிவன்கோவிலிலிருந்து மாவீரர் பெற்றோர் சுமார் 200 பேர் பான்ட் வாத்தியத்துடன் அழைத்துவரப்பட்டு, புதுக்குளம் மகாவித்தியாலய வாசலில் வைத்து மாலை அணிவிக்து, வரவேற்கப்பட்டனர். தொடர்ந்து பொதுச்சுடர் ஏற்றப்பட்டு அகவணக்கம் செலுத்தப்பட்டபின், மாவீரர்களின் பெற்றோர்கள் கௌரவிப்பு இடம்பெற்றது.

# நவீன சந்தை நிலையமொன்றை கிளிநொச்சியில் அமைக்க நடவடிக்கை

கிளிநொச்சி—

கரைச்சி தெற்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் ஏற்பாட்டில் - நவீன சந்தை நிலையம் "மொடேன் சொப்" என்ற பெயரில் இது திறக்கப்படவுள்ளதாக சங்க இயக்குநர்சபை பிரதிநிதி சண் முகநாதன் தெரிவித்தார்.

தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

இந்தப் பகுதி விவசாயிகளினதும், பொதுமக்களினதும் நன்மை கருதி இந்த விற்பனை நிலையம் திறக்கப்படவுள்ளது.

இந்த நிலையத்துக்கு நிரந்தர கட்டடமொன்றை நிறுவுவதற்கான அடிக்கல் நாட்டுவிழா சங்கத் தலைவர் வை.குகராசா தலைமையில் அண்மையில் நடைபெற்றது. அத்துடன், சிவநகர் சங்கக் கிளைக்கான நிரந்தரக் கட்டடமொன்றை நிறுவுவதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

யுத்த நிலைமைகளை அடுத்து கிளிநொச்சி கணேசபுரம் கிளை நிலையத்தில் நிரந்தர கட்டட வசதியின்மையால் திருநகர் கிளையுடன் இணைக்கப்பட்டுள்ளது. இதனால் கணேசபுரம் மக்கள் சிரமப்படுவதாகவும், இந்தக் கிளையை சொந்த இடத்திலே மீண்டும் திறக்கவேண்டுமெனவும் கேட்டுள்ளார்.

# புனரமைக்கப்படாத நிலையில் நெடுங்கேணி - முல்லைத்தீவு வீதி

முல்லைத்தீவு—

நெடுங்கேணி ஊடாக முல்லைத்தீவுக்குச் செல்லும் பிரதான வீதி மிகவும் சேதமடைந்துள்ளது. இதனால் இந்த வீதியூடாகப் போக்குவரத்து செய்வதில் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

1990 ஆம் ஆண்டிலிருந்து இந்த வீதி புனரமைக்கப்படவில்லை. தற்போது இந்த வீதியூடான போக்குவரத்துச் சேவைகள் அதிகரித்துள்ள நிலையில் பிரயாணிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

இந்த வீதியில் இடையிடையே கிரவல் போட்டு பள்ளங்கள் நிரப்பப்பட்டுள்ள போதும் - வீதி முழுமையாகப் புனரமைக்கப்படாததால் இவை பயனற்றதாகவுள்ளன.

தற்போது பருவ மழை ஆரம்பித்துள்ளதால் இந்த வீதியால் செல்லும் வாகனங்கள் புதைகின்றன. இதன் காரணமாக போக்குவரத்தும் அடிக்கடி தடைப்படும் நிலை ஏற்பட்டுள்ளது.

(03)

## காலச் சுவட்டில்...

### இன்றைய நாளில் அன்று நிகழ்ந்தவை

**நவம்பர் 23**

1552 : பெண்கள் தங்கிப் படிப்பதற்கான பாடசாலை ஒன்று முதன் முதலாக லண்டன் கிறைஸ்ட் மருத்துவமனயில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

1616 : பாடசாலைகளில் புவியியல் பாடம் நடத்துவதற்கு உதவியாக இருக்கும் துணைச் சாதனமான உலக உருண்டையை உருவாக்கிய ரிச்சர் ஹக்குல்யட் மரணமடைந்தார்.

1667 : டொக்டர் ரிச்சர்ட் லோயர் என்பவரும், டொக்டர் டெட்மண்ட் கிங் என்பவரும் லண்டன் 'அருண்டேல் ஹவுஸ்' என்றஇடத்தில் ஆய்வு நோக்கத்திற்காக முதன் முதலாக இரத்த மாற்றம் செய்து பார்த்தனர்.

1848 : முதன் முதலாக பெண்கள் மருத்துவக்கழகம் பொஸ்டனில் ஆரம்பிக்கப்பட்டது.

1852 : முதன் முதலாக பிரிட்டனில் ஜெர்சியி சென். ஹெலியர் என்னுமிடத்தில் அஞ்சல் பெட்டிகள் அமைக்கப்பட்டன.

1936 : முதன் முதலாக வர்ண ஒளிப் படங்கள் நிறைந்த பத்திரிகையின் முதலாவது இதழ் வெளிவரத் தொடங்கியது. லைவ்ப் என்ற இந்தப் பத்திரிகையின் முன் பக்கத்தில் பிறந்த குழந்தை ஒன்றை மருத்துவர் ஒருவர் தலைகீழாகப் பிடித்திருக்கும் படம் போடப்பட்டு,அதன் கீழே 'வாழ்க்கை தொடங்குகிறது' என அச்சிடப்பட்டிருந்தது.

1951 : எல்லைப் பிரிவினைக் கோடு பற்றி தென்கொரியாவும், வடகொரியாவும் கொரியப் போர் நிறுத்தப் பேச்சுவார்த்தையின்போது உடன்பட்டன.

1952 : இந்தியாவின் கொடைக்கானல் பகுதியில் முதன்முதலாக வானொலித் தொலைநோக்கி நிறுவப்பட்டது.

1964 : முதன்முதலாக வர்த்தக நோக்குடன் வானொலி நிலையம் 'ரேடியோ மான்ங்க்ஸ்' என்ற பெயருடன் பிரிட்டனில் தொடங்கியது.

1966 : சர்வதேச கணினி சதுரங்கப்போட்டி நடைபெற்றது. ஸ்டான் போர்ட் பல்கலைக்கழக பேராசிரியர் ஜோன் மெக்கார்தியின் கணினிக்கும், ரஷ்ய பௌதீகவியல் விதிமுறை ஆய்வு முறைக் கழகத்தைச் சேர்ந்த ஆபிரகாம் அலிக் நோவின் கணினிகளுக்கும் இடையே இப்பேட்டி நடந்தது. இந்தப் போட்டியில் ரஷ்ய கணினி வெற்றியடைந்தது.

1980 : இத்தாலியின் தென்பகுதியில் அடுத்தடுத்து ஆறுமுறை நில நடுக்கம் ஏற்பட்டது. இதில் 2614 பேர் இறந்து போயினர்.

1986 : அரசைக் கவிழ்க்கச் சதி செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டு, பிலிப்பைன்ஸ் பாதுகாப்பு அமைச்சர் பதவியிலிருந்து நீக்கப்பட்டார்.

1989 : தமது காரில் மறைத்து வைக்கப்பட்டிருந்த குண்டு வெடித்ததன் காரணமாக லெபனான் ஜனாதிபதி ரெனி போவாட் கொல்லப்பட்டார்.

1990 : லண்டனில் விக்ரோரியா அல்பேர்ட் அருங்காட்சியகத்தில் நேரு இந்தியக் கலையரங்கு என்று நிரந்தரமான ஒரு பிரிவு ஆரம்பிக்கப்பட்டது.

1995 : பல நாடுகளின் கடுமையான எதிர்ப்புக்குமிடையே தெற்கு பசுபிக்கில் பிரான்ஸ் நான்காவது அணுச் சோதனையை நடத்தியது.

**தொகுப்பு : — சந்துரு**

# க.பொ.த. சாதாரணதர மாணவர்களுக்கு நீடோ நிறுவனத்தால் விசேட கருத்தரங்கு!

கிளிநொச்சி—

நோர்வே நாட்டு மாணவர்களினதும், அபிவிருத்தி நிதியத்தின் நிதியுதவியுடனும் நீடோ நிறுவனத்தால் 2005 க.பொ.த. சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவருக்கான விசேட கருத்தரங்கு- நேற்றுமுன்தினம் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

இந்தக் கருத்தரங்கு மன்னார், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா ஆகிய மாவட்டங்களில் நடைபெறவுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் ஆண்டான்குளம் றோமன் கத்தோலிக்க பாடசாலை, பெரிய பண்டிவிரிச்சான் பாடசாலை, இலுப்பைக்கடவை அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, கருங்கண்டால் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை ஆகியவற்றில் நேற்று முன்தினம் ஆரம்பமான இந்த விசேட கருத்தரங்கு 25 ஆம் திகதி வரையும் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 2 மணி வரையும் நடைபெற்று வருகின்றது.

யாழ்ப்பாணத்தில்- கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி, இராமநாதன் கல்லூரி ஆகிய பாடசாலைகளில் அடுத்த மாதம் முதலாம் திகதி தொடக்கம் 5ஆம் திகதி வரை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 2 மணிவரை இக்கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில்- அறிவியல் நகர் வளநிலையம், பூநகரி மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் எதிர்வரும் 27 ஆம் திகதி தொடக்கம் 30 ஆம் திகதிவரை-காலை 8.30 மணி தொடக்கம் மாலை 2 மணி வரை இந்தக் கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் பாலிநகர் வளநிலையம், உண்ணாப்புலவு பொதுநோக்கு மண்டபம் ஆகிய இடங்களில் எதிர்வரும் 28 ஆம் திகதி தொடக்கம் எதிர்வரும் 1 ஆம் திகதிவரை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 2.30 மணிவரை நடைபெறவுள்ளது.

வவுனியா மாவட்டத்தில்- கனகராயன்குளம் மகாவித்தியாலயம், நெடுங்கேணி மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் அடுத்த மாதம் 29 ஆம் திகதி தொடக்கம், எதிர்வரும் 2 ஆம் திகதிவரை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 2 மணி வரை நடைபெறும்.

இந்தக் கருத்தரங்கில் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய பாடங்கள் விசேட ஆசிரிய குழுக்களால் நடத்தப்படுவதுடன், பரீட்சை வழிகாட்டல் கையேடுகளும் வழங்கப்படவுள்ளன.

# மாவீரர் நாளை முன்னிட்டு வவுனியாவில் நிகழ்வுகள்

வவுனியா—

மாவீரர்நாளை முன்னிட்டு வவுனியா நகரம் எழுச்சிக்கோலம் பூண்டுள்ளது.

தமிழீழ மாவீரர்நாளை முன்னிட்டு நேற்றுமுன்தினம் மாவீரர் எழுச்சி வாரம் தமிழர் தாயகப் பகுதியெங்கும் உணர்வு பூர்வமாக ஆரம்பிக்கப்பட்டது. வவுனியாவில் பல்வேறு இடங்களிலும் வீதிகள் எங்கும் பதாகைகள் கட்டப்பட்டு, அலங்கரிக்கப்பட்டுள்ளது. வீதிகளில் சிரமதானப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதேவேளை மாவீரர்நாளை முன்னிட்டு பல்வேறு நிகழ்வுகளும் இடம்பெற்றுவருகின்றன.

ஈச்சங்குளத்திலுள்ள மாவீரர் துயிலும் இல்லம் மக்களால் சிரமதானம் செய்யப்பட்டு அலங்கரிக்கப்பட்டுள்ளது. வவுனியா வடக்கு மக்களுக்கு தமிழீழ பொருண்மியகத்தால் பழமரக் கன்றுகள் வழங்கப்பட்டன.

கடந்த ஞாயிற்றுக்கிழமை புதுக்குளம் மகாவித்தியாலயத்தில் மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு இடம்பெற்றது. நாளை செட்டிகுளம் மகாவித்தியாலயத்திலும் மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு இடம்பெறவுள்

## யானை தாக்கியதில் இருவர் படுகாயம்!

கொக்காவில்—

கொக்காவில் பகுதியில் நேற்று முன்தினம் இரவு காட்டு யானைகள் கிராமத்துக்குள் புகுந்து தாக்கியதில் இருவர் படுகாயமடைந்தனர்.

இந்தப் பகுதிக்குள் உள்நுழைந்த யனைகள் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தவர்களைத் தாக்கியதிலேயே இவர்கள் படுகாயமடைந்தனர்.

யானைகளின் இந்தத் திடீர் வருகையால் வீதியூடான போக்குவரத்தும் ஒரு மணி நேரம் தடைப்பட்டிருந்தது.

அண்மைக்காலமாக கொக்காவிலை அண்டிய ஏ-9 வீதியில் யானைகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(03)

## போக்குவரத்துசேவை துண்டிப்பு

வடமராட்சி கிழக்கு—

தொடர்ந்து பெய்துவரும் பெருமழை காரணமாக வடமராட்சி கிழக்கு, கிழக்கெல்லைக்கிராமங்களுக்கான போக்குவரத்துச் சேவை முற்றாக நிறுத்தப்பட்டுள்ளது.

இதனால் சகல தொடர்புகளும் துண்டிக்கப்பட்ட நிலையிலுள்ள கிழக்கெல்லைக் கிராம மக்கள் படகுகள் மூலம் பிரயாணம் மேற்கொள்ள ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

சுண்டிக்குளம், கேவில், போக்கறுப்பு, நித்தியவெட்டை, கட்டைக்காடு, வெற்றிலைக்கேணி, ஆழியவளை கிராம மக்கள் வெற்றிலைக்கேணி மருதடி - மருதங்கேணி சந்திவரை வீரக்களி ஆறு ஊடாக படகில் பிரயாணம் செய்து, மருதங்கேணியிலிருந்து பஸ் மூலம் பிரயாணம் செய்யும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

மழைகாலம் முடிவடைந்தவுடன் வீதிகள் புனரமைக்கப்படும் வரை வீரக்களி ஆறு ஊடாகவே படகுச் சேவை மூலம் இந்தப் பிரதேச மக்கள் பிரயாணம் மேற்கொள்ளும் நிலை ஏற்பட்டுள்ளது.

(21)

# நமது ஈழநாடு

**வைர வரிகள்**

உங்களால் என்ன முடியுமோ அல்லது என்ன முடியுமென்று நினைக்கிறீர்களோ, அதைத் தொடங்குங்கள் அந்தத் துணிவே வெற்றியின் முதல்படி. - கத்தே -

## நமது நோக்கு

# எரியும் நெருப்பில் இவரும்...

நாட்டின் 14 ஆவது பிரதமராக ரட்ணசிறி விக்கிரம நாயக்கவை நியமித்ததன் மூலம் - தனது அரசு கடும் கோட்பாட்டாளர்களின் அரசு என்பதை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பிரகடனம் செய்திருக்கிறார்.

ஜனாதிபதியாக மகிந்த தெரிவு செய்யப்பட்டபோதும் சரி, பிரதமராக ரட்ணசிறி விக்கிரமநாயக்க நியமிக்கப்பட்டபோதும் சரி, சர்வதேச செய்தி நிறுவனங்கள் யாவுமே 'கடும் கோட்பாட்டாளர்' என்ற அடைமொழியைத்தான் பயன்படுத்தின.

கடும் கோட்பாட்டாளர்கள் இருவரை நாட்டின் முதன்மை வாய்ந்த தலைவர்களாக கொண்ட அரசாங்கம் எத்தகைய நகர்வுகளை மேற்கொள்ளப் போகின்றது என்பது குறித்து பலரும் பல்வேறு எதிர்வுகூறல்களை வெளிப்படுத்தி யுள்ளனர்.

மகிந்தவும், ரட்ணசிறியும் இணைந்து ஏற்படுத்தியுள்ள அரசுக்கு பக்கத்துணையாக இருப்பது - ஜே.வி.பியும், ஜாதிக ஹெல உறுமயவும் என்பதால் நாட்டின் அமைதிநிலை கேள்விக்குள்ளாகும் என்றே எதிர்பார்க்கப்படுகின்றது.

டி.எம்.ஜெயரட்ணவே அடுத்த பிரதமர் என்று அரசியல் வட்டாரங்களில் உறுதிப்படுத்தப்பட்டிருந்த போதும் - அவரையும் ஓரங்கட்டிவிட்டு ரட்ணசிறியை பிரதமராக நியமித்தது மகிந்த ராஜபக்ஷவின் தனியான முடிவு அல்ல.

இந்த முடிவை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கட்சித் தலைவர்களே தீர்மானித்தனர் - குறிப்பாக ஜே.வி.பி. இதில் ஆதிக்கம் செலுத்தியதாக பரவலான கருத்து நிலவுகிறது.

நாட்டில் அரசியல் தலைமைத்துவத்தில் இருந்து கண்டிய உயர்மட்டத் தலைமைகளை அகற்றிவிடும் சதித் திட்டம் ஒருபுறம், நாட்டின் அரச நிர்வாகத்தில் இறுக்கமான போக்கைக் கடைப்பிடிக்க மகிந்தவுக்கு சமமான ஒருவரை நியமித்தல் என்பது இன்னொரு புறமுமாகத்தான் இந்தத் தெரிவு இடம் பெற்றிருக்கிறது.

டி.எம்.ஜெயரட்ணவோ, மைத்திரிபால சிறிசேனவோ எல்லா சந்தர்ப்பங்களிலும் மகிந்தவுடன் இணங்கிப் போகிறவர்களாகவோ - கடும்போக்குடன் செயற்படுபவர்களாகவோ இருக்க மாட்டார்கள் என ஜே.வி.பி. கருதுகிறது.

ஆனால், ரட்ணசிறி விக்கிரமநாயக்க கடந்த காலத்தில் பிரதம ராக இருந்தபோதும் சரி, பிரதிப் பாதுகாப்பு அமைச்சராக இருந்த போதும் சரி மிகவும் இறுக்கமான ஒருவராகவே இருந்தார்.

அதேநேரம், சந்திரிகாவின் தலைமைத்துவத்துடன் முரண்படாதவராகவும் நடந்துகொண்டார். சிங்கள தேசியவாதி ஒருவரையே பிரதமராக வைத்திருப்பதன் மூலம் மகிந்த - ஜே.வி.பி - ஹெல உறுமய கூட்டு நிறைய விடயங்களைச் சாதிக்க நினைக்கிறது.

மகிந்தவின் பின்னால் இருக்கின்ற மிகப்பெரிய சவால் போர் நிறுத்தம் - சமாதான முயற்சிகள் தொடர்பான முடிவுகளை எடுப்பது தான். இந்த விடயத்தில் மகிந்த ஒரு கடும் கோட்பாட்டாளர் என்பதை விட ஜே.வி.பி., ஹெல உறுமயவே இறுதி முடிவுகளைத் தீர்மானிக் கும் சக்தியாக இருக்கிறது.

கடும் கோட்பாட்டாளர்கள் மத்தியில் இருந்து இனப்பிரச்சினைத் தீர்வு, சமாதான முயற்சிகள், போர் நிறுத்தம் தொடர்பான நியாயபூர்வமான சிந்தனைகள் எழுவதற்கு வாய்ப்பில்லை.

மகிந்த வெற்றிபெற்றபோதே நாட்டு மக்கள் மத்தியில் மட்டுமன்றி - சர்வதேச ரீதியிலேயே சமாதான முயற்சிகள் பாதிக்கப்படும் என்று கருத்துக்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன என்றால் அதற்கு அவரது கொள்கைகளே காரணம்.

தமிழ் மக்களின் நியாயபூர்வமான அபிலாஷைகள், கோரிக்கைகளுக்கு முரணான வகையில் மகிந்த தனது தேர்தல் விஞ்ஞாப னத்தை வெளியிட்டிருந்த நிலையில், இலங்கைத் தீவில் அமைதி நிலை தோன்றுவதற்குத் தடையைத் தோற்றுவிப்பவராக அவர் இனங்காணப்பட்டிருக்கிறார்.

இப்போது ரட்ணசிறி விக்கிரமநாயக்கவை பிரதமராக்கியுள்ளதன் மூலமாக - தான் ஒரு சிங்கள பௌத்த தேசியவாதி என்பதையும் - கடும்போக்குடன் தனது அரசு நடந்துகொள்ளும் என்பதையும் அவர் வெளிப்படுத்தியிருக்கிறார்.

தனது கட்சிக்குள் தோன்றியிருக்கும் போட்டி பூசல்களைச் சமாளிக்கவே ரட்ணசிறியை பிரதமராக்கியதாக சில தரப்புக்கள் கருத்து வெளியிட்டாலும் - மகிந்தவின் தெரிவுக்கு முழுக்காரணம் இதுவாக இருக்க வாய்ப்பில்லை.

மகிந்தவுக்கு இணையான கடும் கோட்பாட்டாளராகவோ அல்லது அதற்கும் ஒருபடி மேலே செல்பவராகவோ ரட்ண சிறி விக்கிரமநாயக்க இருக்கக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழர் இனப்பிரச்சினை, போர் நிறுத்தம், சமாதான முயற்சிகள் என்று எரியும் பிரச்சினைகளில் இந்த இரண்டு கடும் கோட்பாட்டாளர்களும் அடுத்து எடுக்கப்போகும் நகர்வுகள்தான் நாட்டில் அமைதி நிலவுமா என்பதைத் தீர்மானிக்கும்.

இந்த இரு கடும்கோட்பாட்டாளர்களும் எரியும் நெருப்பில் எண்ணெய் வார்ப்பார்களேயானால் அது அவர்களையும் சுட்டெரிக்கத் தவறாது.

267, Navalar Road,
Jaffna.
T.P. - 021-2225107
www.eezhanaadu.com


# மாவீரர் நாள் நவம்பர் - 27.2005



"மண்ணின் மைந்தர்களான மாவீரர்களைப் பெற்றெடுத்த பெற்றோர்களையும் நான் போற்றுகின்றேன். உங்களது குழந்தைகள் தமது உயிருக்கு மேலாகத் தமது தாய் நாட்டின் சுதந்திரத்தை நேசித்தார்கள். இந்த உத்தம மானவர்களை ஒரு புனித இலட்சியத்திற்கு உவந்தளித்த பெற்றோராகிய நீங்கள் நிச்சயம் பெருமை கொள்ள வேண்டும். உங்களது குழந்தைகள் சாகவில்லை. சரித்திர மாகிவிட்டார்கள்."

- தமிழீழத் தேசியத் தலைவர் -

## நாடும் நடப்பும்




# மாவீரர் தின உரையை எதிர்பார்க்கும் மக்கள் அரசின் கொள்கையில் ஆர்வமில்லையே

தேர்தலில் வெற்றிபெற்று நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாகப் பதவியேற்றவுடன் எல்லாம் சுமுகமாகவும், சுலபமாகவும் நடந்துவிடும் என்று மஹிந்த ராஜபக்ஷ நினைத்திருந்தாரானால் அது எவ்வளவு தவறு என்பதை இப்போது உணர்ந்திருப்பார். இதுபோலவே இனப்பிரச்சினையையும்தான் தேர்தல் பிரசார மேடைகளில் சொன்னதுபோல எல்லோருக்கும் திருப்தியளிக்கக்கூடிய முறையில் தீர்த்துவைக்க முடியுமென்று இன்னமும் நினைத்திருப்பாரானால் அது எவ்வளவு பெரிய தவறு என்பதையும் விரைவில் உணர்ந்து கொள்வார் என்று சொன்னபடி வந்தார் நண்பர் பரமசிவம்.

அமைச்சரவை அமைப்பதிலேயே இழுபறி இருக்கிறதாகத் தெரிகிறதே, நாடாளுமன்றம் கூடுவதைக்கூட மூன்று நாட்களுக்கு ஜனாதிபதி மஹிந்த தள்ளி வைத்திருக்கிறாரே என்று நான் சொன்னேன்.

தேர்தல் வெற்றிக்காகப் பேசிய கடினப் போக்குகளைச் செயல்படுத்தலாமென்று மஹிந்தவின் புதிய அரசு நினைத்துச் செயற்பட்டால் அவர்கள் விடுதலைப் புலிகளிடம் வசமாக மாட்டிக் கொள்வதுடன் நாட்டையும் பேரழிவுக்குத்தான் கொண்டு செல்வார்கள் என்று நான் நேற்றுக் குறிப்பிட்ட கே.கொடகே தமது கட்டுரையில் தெரிவித்திருக்கிறார். கொடகே முன்பு வெளிநாட்டு ராஜீய சேவையில் இருந்தவர் என்பது குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும் என்று பரமசிவம் சொன்னார்.

புதிய அமைச்சரவையை அமைத்து அரசாங்கத்தை திடமாக கால்பதிய வைக்கும் முயற்சிகளில் மகிந்த பாடுபடுகிறார். ஜே.வி.பி அரசில் இணைந்துகொள்ள மறுத்து தனது மதிப்பை உயர்த்திக்காட்ட முனைந்துகொண்டிருக்கிறது. புதிய அரசாங்கம் அமைக்கப்படும் முயற்சிகள் மகிந்தவின் வெற்றி தரப்போகும் பயன்கள் பற்றிய செய்திகளை ஊடகங்கள் வெளியிட்டுக்கொண்டிருந் தாலும் இனப் பிரச்சினையில் மகிந்த எவ்வளவு அக்கறையுடனும், அவசரமாகவும், அவதானமாகவும் நடந்து கொள்ள வேண்டும் என்பதையும் அர சியல் ஆய்வாளர்கள் ஊடகங்கள் வாயிலாக எடுத்துச் சொல்லிக்கொண்டுதான் இருக்கின்றனர். எடுத்தேன் கவிழ்த்தேன் என்ற நிலைக்கு மகிந்த போய்விடக்கூடாது என்பதில் இவர்கள் எச்சரிக்கையாக இருக்கின்றனர்.

இதேசமயம் விடுதலைப் புலிகளின் மாவீரர் தின ஏற்பாடுகள் பற்றியும், கொழும்பு ஆங்கில தினசரியொன்று முதல் பக்கத்தில் தலைப்புச் செய்தியாகவும் முக்கியத்துவம் கொடுத்து வெளியிட்டிருக்கிறது. ஆனையிறவில் முன்பு சிறிலங்கா அரச படைகளின் பாரிய முகாம் இருந்த இடத்தில் இந்த முறை மாவீரர் தினக் கொண்டாட்டம் நடைபெறுவதற்கும் பெரிய எடுப்பில் ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாகவும் மிகப் பெரிய பந்தல் இந்த இடத்தில் அமைக்கப்பட்டிருப்பதாகவும், தமிழீழத்தின் தேசியக் கொடியான புலிக்கொடி மிகப் பெரிய அளவில் இந்த இடத்தில் பறந்துகொண்டிருப்பதாகவும், இந்தத் தலைப்புச் செய்தியில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனையிறவிலிருந்து ஏ-9 பிரதான வீதியில் இரு பக்கமும் நீண்ட தூரத்துக்கு மஞ்சள் சிவப்புக் கொடிகள் அலங்கரித்துப் பறந்துகொண்டிருப்பதாகவும் இந்தச் செய்தி தெரிவிக்கிறது என்று பரமசிவம் சொன்னார்.

தமிழீழத்தை அடைவதற்கு இறுதிப்போர் நடைபெறவிருப்பதாகவும், இதற்கு வெளிநாடுகளிலுள்ள புலம்பெயர்ந்த தமிழ் மக்களிடம் இருந்து பெரிய தொகைகளை விடுதலைப் புலிகளின் முன்னணி அமைப்புக்கள் கேட்டு வசூலிப்பதாகவும் கொழும்பு ஆங்கில தினசரிகள் செய்திகள் வெளியிட்டு வருகின்றன. சிங்களப் பத்திரிகைகள் எப்படி இந்தச் செய்திகளை வெளியிடுகின்றன என்பது தெரியவில்லை என்று சொன்னேன்.

ஆனால், ஒருவித்தியாசம் இப்போது தெரிகிறது. முன்பு விடுதலைப்புலிகளின் மாவீரர் தினச் செய்தியோ வேறு. இது சம்பந்தமான செய்திகளை வெளியிடும் போதே ஒருவித கிண்டல் தொனியில் செய்திகளை வெளியிடுவார்கள். இப்போது விடுதலைப்புலிகளின் செய்திகளை மரியாதை கலந்த செய்திகளாகவே வெளியிடுகின்றன.

இதேசமயம் ரணில் விக்கிரமசிங்காவின் தோல்விக்கு விடுதலைப்புலிகள் கடைசி நேரத்தில் எடுத்த முடிவே காரணம் என்றும் குற்றம்சாட்டுகிறார்கள். இவர்கள் நவீன் திஸநாயக்கா, மிலிந்த மொறகொட ஆகியோரின் உளறல்கள் பற்றியும் யாரும் பேசுவதாகக் காணோம். மஹிந்தவின் வெற்றிக்காகவோ ரணிலின் தோல்விக்காகவோ தமிழ் மக்கள் ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்காமல் விடவில்லை தென்னிலங்கை மக்களுக்குச் சொல்லவேண்டிய செய்தியைத்தான் தமிழ் மக்கள் தேர்தல் வாக்களிப்பைப் புறக்கணித்ததன் மூலம் தெரியப் படுத்தியிருந்தார்கள் என்று புலிகளின் மூத்த உறுப்பினர் க.வே.பாலகுமாரன் அவர்கள் கொடுத்த விளக்கத்தை தென்னிலங்கையிலுள்ளவர்கள் விளங்கிக்கொள்ளவில்லை என்றே தோன்றுகிறது என்று பரமசிவம் சொன்னார்.

நாடாளுமன்றக் கூட்டத்தை ஜனாதிபதி தொடக்கி வைக்கும்போது ஜனாதிபதி தமது அரசின் கொள்கையைப் பிரகடனப்படுத்தி உரை நிகழ்த்துவது சம்பிரதாயம். இந்த உரையில் இனப்பிரச்சினைத் தீர்வுபற்றி ஏதாவது எடுத்துச் சொல்வாரா? இதுபற்றி அரசியல் தலைவர்களோ, தென்னிலங்கை மக்களோ ஆர்வம் காட்டுவதாகவும் தெரியவில்லையே என்று நான் சொன்னேன்.

யார் யாருக்கு எந்தப் பதவி கிடைக்கும். நாட்டில் எப்படிக் குழப்பத்தைத் தொடங்குவது என்றே சிலர் இன்னமும் சிந்தித்துக்கொண்டிருப்பதாகவே தோன்றுகிறது. இந்த நிலையில் கொள்கைப் பிரகடனம் பற்றி யார் சிந்திக்கப் போகிறார்கள். அதுதான் தலைவர் பிரபாகரனின் மாவீரர் உரையை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்களே என்று சொல்லிக்கொண்டு பரமசிவம் நடந்தார்.

# பாடசாலைகளில் மாணவர்களை மதிப்பீட்டுக்கு உள்ளாக்குதல்

**கல்விசார் மதிப்பீடுகளில் மிக நீண்ட காலமாக மாணவர்களே முக்கியமாகக் கருதப்பட்டனர். அண்மைக் காலங்களில் பாடசாலை மட்டக் கணிப்பீடு இடம்பெறுகின்ற பொழுது, அவர்களுடைய முக்கியத்துவம் இன்றும் அதிகரித்துள்ள போதிலும், மாணவர்கள் மட்டும் மதிப் பீட்டுக்கு உட்பட வேண்டியவர்களென்ற கருத்தில் மாற்றங்கள் ஏற்படுவதும் குறிப்பிடத்தக்கது.**

மாணவர்களின் மேம்பாடு சார் நிலைமைகளைக் கருத்திற் கொள்ளும் வகையில் அடைவு மட்டங்களை கல்விப் புலங்களில் அதிகரிக்கச் செய்யும் நோக்கில் பாடசாலைகளில் மாணவர்கள் பற்றிய மதிப்பீடு அமைகிறது. மாணவர்களும் அவர்களுடைய கல்விசார் பெறுபேறுகளும் பாடசாலைக் கல்வியில் எப்பொழுதும் முக்கியமாக இடம்பெற்று வந்துள்ளன. தற்காலக் கல்விச் செயற்பாடுகளைப் பெரிதும் விரும்பாத முற்போக்குக் கல்விச் சிந்தனையாளர்கள் கூட பாடசாலைகளில் மாணவர்களுக்குரிய இடம் முக்கியமானது என்பதை ஏற்றுக்கொள்கின்றனர். மாணவர்களின் அடிப்படைத் திறன்களையும் மக்களுடைய கலாசாரத்தையும், பேணிவளர்ப்பதில் பாடசாலைகள் கவனமெடுக்கவில்லை என்றால், கல்விச் செயற்பாடுகள் யாவும் வீண்விரயமாகிவிடும் என்கின்றனர் மரபு வழிச் சிந்தனையாளர்கள். இத்தகைய இரண்டு கருத்துக்கும் மேலாக, பாடசாலைகள் சந்தைச் சமூகங்களின் கோட்பாடுகளுக்கமைய, மாணவரின் அடைவுகளிலும் பார்க்க, தமது முதலீடுகளால் உண்டாகும் விளைவுகளையே கல்விச் சீர்திருத்தங்களின் மூலம் எதிர்பார்க்கின்றனர்.

கல்விசார் மதிப்பீடுகளில் மிக நீண்டகாலமாக மாணவர்களே முக்கியமாகக் கருதப்பட்டனர். அண்மைக்காலங்களில் பாடசாலை மட்டக் கணிப்பீடு இடம்பெறுகின்ற பொழுது, அவர்களுடைய முக்கியத்துவம் இன்றும் அதிகரித்துள்ள போதிலும், மாணவர்கள் மட்டும் மதிப்பீட்டுக்கு உட்பட வேண்டியவர்களென்ற கருத்தில் மாற்றங்கள் ஏற்படுவதும் குறிப்பிடத்தக்கது.

டேவிட் நெவோ என்பவர், பாடசாலையின் செயற்திட்டங்கள், கற்பித்தல் முறைகள், கற்பித்தல் சாதனங்கள் மற்றும் ஆசிரியர்களும் மதிப்பிட வேண்டும் என்றும் கருத்தை வலியுறுத்தியுள்ளார். ஆயினும், மாணவர்களை மதிப்பிடுதல் என்பது ஒரு பாடசாலையை முழுமையாக மதிப்பிடுவதற்குரிய வழி முறையாக இருக்கும் என்பதையும் இவர் வலியுறுத்துகின்றார்.

அண்மைக்காலங்களிலே, உறுதியான கோட்பாடுகளையும், சிறந்த ஒழுங்கமைப்பையும் கொண்டுள்ள வகையில் மாணவர் மதிப்பீடுகள் அவுஸ்ரேலியா, பிரித்தானியா, கனடா, நியூசிலாந்து மற்றும் ஐக்கிய அமெரிக்கா போன்ற நாடுகளில் நன்கு விருத்தியடைந்துள்ளன. இவை மாணவர் மதிப்பீடுகள் தொடர்பாக எழுந்துள்ள பிரச்சினைகளை நன்முறையில் அணுகுவதற்குரிய அடிப்படைகளையும் உருவாக்கியுள்ளன.

மதிப்பீடு தொடர்பாக ஏற்பட்டு வரும் புத்தாக்கங்கள், செயற்பாடுகள், நியதிகள் மற்றும் அளவீட்டு முறைகள் மற்றும் அவற்றின் வகுப்பறைப் பயன்பாடுகள் போன்ற விளக்கங்களை மாணவர்கள் நன்கு அறிந்திருத்தலும் முக்கியமானது.

மாணவர் மதிப்பீட்டின் வரலாற்றை நோக்கும் பொழுது, ஸ்கிறிவன் என்பவர் 1960 நிகழ்ச்சித் திட்ட மதிப்பீடு (Programme Evaluation), கூட்டு மதிப்பீடு (Summation Evaluation) ஆகியவற்றைக் குறிப்பிட்டுள்ளார். இவற்றை புறமும் ஏனையவர்களும் பயன்படுத்தியதுடன், இனங்காண் மதிப்பீடு (Diagnostic evaluation) என்னும் இன்னொரு பிரிவையும் சேர்த்துக் கொண்டனர்.

மாணவர் மதிப்பீட்டில் 1.முதல் நிலைச் செயற்பாடுகள், 2. இரண்டாம் நிலைச் செயற்பாடுகள் என இரண்டு பிரிவுகள் உள்ளன. மதிப்பீட்டில் மாணவர்களுக்கு முக்கிய இடம் வழங்குதல், கற்றலை மேம்படுத்துவதற்குரிய தகவல்களை வழங்குதல், ஒவ்வொரு மாணவனினதும் கல்வியடைவுக்கான சான்றிதழை வழங்குதல் என்பன முதனிலைச் செயற்பாட்டில் அடங்கும். இரண்டாம் நிலைச்செயற்பாடானது - மாணவர்களுக்குப் பதிலாக ஆசிரியர்களுக்கும் பாடசாலைக்கும் முக்கிய இடத்தை வழங்குவதுடன், பாடசாலையின் வகை சொல்லுமியல்பையும் (Accountability of School) மாணவர் முன்னேற்றத்தையும் வலியுறுத்துகின்றது.

மாணவர் மதிப்பீடானது அதன் ஒவ்வொரு கட்டத்திலும், மாணவர் அடைய வேண்டிய அம்சங்களில்எவற்றை அடைந்து கொண்டார்கள் என்பதை உறுதிப்படுத்துவதாக இருத்தல் வேண்டும். இதனைக் குறித்து வழங்கப்படும் சான்றிதழ்கள் (Certification) மாணவர்களை அடுத்த கட்டக் கல்விக்கு ஆயத்தம் செய்வதாக அல்லது எதிர்கால வேலை வாய்ப்புக்கு அல்லது உயர் கல்வியைப் பெறுவதற்கு அடிப்படையாக அமையலாம். இவற்றை விட மாணவரை இனங்காணல், கற்றல், கற்பித்தலை மேம்படுத்துவதற்கும், கற்றல் கற்பித்தலுக்குப் பொருத்தமான கொள்கைகளையும் கற்பித்தல் முறைகளையும் திட்டமிடுவதற்கும் இந்த மதிப்பீடு பாடசாலைகளுக்கு உதவுகிறது.


மதிப்பீட்டின் விளைவுகளைப் பாடசாலைகள் வகை சொல்லல் எனும் நோக்கில் பயன்படுத்தும் போது, அவை பாடசாலைகள் பற்றிய மதிப்பீடாகவும், ஆசிரியர் பற்றிய மதிப்பீடாகவும் ஊக்குவிப்பு, மாணவர்கட்டுப்பாடு (Discipline) என்பனவும் அடங்கும். சில பிரச்சினைக்குரிய பாடசாலைகளில் மாணவர் கட்டுப்பாடு என்னும் நோக்கில் மதிப்பீட்டினைப் பயன்படுத்துதல் ஒரு வகையில் காப்பு நடவடிக்கையாகவும் இருக்கும்.

மாணவர் மதிப்பீட்டில் உள்ளடக்கப்படவேண்டிய மாறிகள் எவையென்பதைத் தீர்மானித்தலும் முக்கியமான விடயமாகும். மரபு ரீதியான, இத்தகைய மாறியானது அடைவுகளாக (Achievements) அதாவது அறிகை ஆட்சியின் அடைவுகள் எனக் கருதப்பட்டாலும், மனவெழுச்சி பற்றிய இலக்குகளும் கவனத்தில் எடுக்கப்படுதல் வேண்டும்.

மாணவரின் தரங்களைக் கணிப்பிடும் நோக்கில், வகுப்பறைச் செயற்பாட்டில் அவர்களுடைய பங்கேற்பையும் (Participation) ஆசிரியர்கள் அவதானத்தில் கொள்ளுதல் அவசியமானது.

1960 ஆம் ஆண்டுகளில் அமைப்பு மதிப்பீடுபற்றிய எண்ணக்கருவை முன்மொழிந்த போது அந்த மதிப்பீடானது கல்வி சார் விளைவுகளை மட்டுமன்றி, கல்விச் செயல் முறைகளை, உபாயங்கள் மற்றும் நோக்கம் ஆகியவற்றிலும் கவனம் செலுத்தல் வேண்டும் என்பதும் எடுத்துக் கூறப்பட்டது. நிகழ்ச்சித் திட்டங்கள் பற்றிய ஆய்வுகளில் இந்த விடயம் பெரிதும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

மாணவர் பற்றிய மதிப்பீட்டில் இன்றுவரையில் அடைவு



களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுவது போல அதனுடன் இணைந்துள்ள செயற்பாடுகளுக்கு வழங்கப்படுதில்லை என்ற கருத்தும் உள்ளது. சீசர் என்பவர் ஆக்கத்திறனுடைய மாணவர் மதிப்பீடு பற்றிக் குறிப்பிடும் பொழுது, ஒரு சிந்திக்கும் திறனுள்ள மாணவன் தான் எங்கே செல்கின்றான்; தனது பயணத்தைத் தொடர்வதற்கான அறிவையும் திறனையும் எப்படிப் பெறுகின்றான்? அதற்குரிய வளங்களை எவ்வாறு தேடுகிறான்? என்பதற்கும் மதிப்பீடு வழி கோல வேண்டும் என எடுத்துக் கூறியுள்ளார்.

இந்த வகையிலேயே அமைப்பு மதிப்பீடானது மாணவரின் அடைவினை மட்டுமன்றி மாணவரின் மேம்பாட்டுக்கான பின்னூட்டல்களையும் வழங்குகின்றன. மேலும் மாணவர் அடைவுடன், செயல்முறையையும் தொடர்பு படுத்துவதால் அந்த அடைவுக்குப் பின்னணியிலுள்ள மாணவர் நடத்தைகள் பற்றியும் அறிய முடிகின்றது. அடைவினைப் பொறுத்தவரையில் மாணவர்கள் சிலர் தாம் அடைய வேண்டிய இலக்குகள் பற்றிய அறிவு மற்றும் தெளிவின்மையால் கடும் சிரமத்துக்குள்ளாகலாம். இன்னும் சிலர் கற்றல் உபாயங்களை நன்கு அறிந்து சிரமமின்றி உயர் அடைவுகளைப் பெறலாம். பொதுவாக மாணவர் கற்றல் மேம்பாடு குறித்து இத்தகைய பிரச்சினைக்கு விடை தேடுதல் அவசியமானது.

சான்றிதழ் வழங்கும் நோக்கில் கூட்டு மதிப்பீடும் பயன்படுத்தப்படுகிறது. கூட்டு மதிப்பீடானது (Summative evaluation) மாணவரின் அடைவை மட்டுமன்றி, அவர்களின் பல்வேறு கல்விச் செயற்பாடுகளில் பங்கு பற்றுதலும் கவனத்தில் கொள்ளப்படுகின்றன. பாடசாலைக்குச் செல்வதன் மூலம் ஒரு மாணவன் உருவாக்கப்படுகின்றான் என்ற எதிர்பார்ப்பு உள்ள போது, அந்த மாணவரின் தராதரமானது கடந்த கால மற்றும் நிகழ்காலப் பெறுபேறுகளுடன் மட்டும் நின்றுவிடாமல், அவை எதிர்காலப்பெறுபேறுகளையும் எதிர்வு கூறக் கூடியதாக இருத்தல் வேண்டும். தற்காலத்தில் உருவாக்கப்படும் சோதனைகள் பல எதிர்காலம் பற்றி எதிர்வு கூறும் உயர் தகுதி கொண்டனவாக இருப்பதில்லை. இதன் விளைவாக, மாணவர்களின் பாடசாலை செல்லும் காலத்தில் அவர்களைப் பற்றிய தகவல்களை விரிவான முறையில் சேர்த்துக் கொள்ளவேண்டும்.

கல்வி சார் மதிப்பீடுகளிலும், மாணவர் மதிப்பீடுகளிலும் பல நியதிகளை உருவாக்குதல் வேண்டும். இது சற்றுக் கடினமானதாகும். மாணவர்களின் அடைவை மட்டுமன்றி, அதனுடன் தொடர்புடைய கற்றல் முறைகள், கற்பித்தல் முறைகள், சிறந்த பெறுபேறுகளை அடைவதற்குரிய மாணவரின் இலக்குகள் போன்றவையும் முக்கியமானவை. நியதிகளை உருவாக்குதல் என்னும் பிரச்சினைக்குத் தீர்வு காணும் நோக்கில் - கிளேசர் என்பவர் 1960ஆம் ஆண்டுகளில் நியதி சார் சோதனை, நியமம் சார் சோதனை ஆகியவற்றிலுள்ள வேறுபாடுகளை எடுத்துக் கூறியிருந்தார். நியமம் சார்சோதனைகளில், மாணவரின் இயல்பு, வகுப்பு, வயதுப்பிரிவு, பாடசாலை என்னும் சில குழு அடிப்படையில் மாணவர் நிலை தீர்மானிக்கப்படும். அதேவேளையில் நியதி சார் சோதனைகள், கலைத்திட்டத்தின் மூலம் நிர்ணயிக்கப்பட்ட நியதிகளின் அடிப்படையில் மாணவர் நிலையை ஒப்பிடுகின்றன. நியமவம் சார் சோதனைகள் தெரிவுச் செயற்பாடுகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பது போல, நியதிசார் சோதனைகள் மாணவர் மேம்பாட்டினைக் கவனத்தில் கொள்கின்றன.

நியதிசார் சோதனைகளைப் பயன்படுத்துவதில் ஒரு (paradigm shift) ஏற்பட்டுள்ள போதிலும், அநேகமான பாடசாலைகள் இன்னும் இதனைப் பயன்படுத்துவதில்லை. பல நாடுகளிலே இந்த எண்ணக்கரு பாடசாலைகளைச் சென்றடையாமலும் உள்ளது. ஆசிரியரின் வேலைப்பளு, மாணவர்களின் வேலைப்பளு, ஆசிரியரின் தகைமைகள் போதாமை, நியதிசார் மதிப்பீட்டுக்கு ஏற்ப கற்றல்- கற்பித்தல் முறைகளில் மாற்றங்கள் ஏற்படுதல் போன்ற காரணங்களின் அடிப்படையில் நியதிசார் சோதனைகள் கடினமானவை என்னும் அபிப்பிராயம் நிலவுவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. ஆயினும் - நியதி சார் மதிப்பீடுகள் மாணவர் அடைய வேண்டிய தராதரங்களை நிர்ணயிப்பதுடன், கற்றல் சார்ந்த தேர்ச்சிகள், மற்றும் சமூகத்தின் தேவைகளுக்கும் முக்கியத்துவம் கொடுப்பதால், அந்த மதிப்பீட்டின் இலக்குகளையும், அந்த இலக்குகளை அடையும் வழிமுறைகளையும் ஆசிரியர்கள், மாணவர்களுக்கு எடுத்துக் கூறுதல் வேண்டும்.

இலங்கையிலே 1995 இல் அறிமுகப்படுத்தப்பட்ட கல்விச் சீர்திருத்தங்களின் அடிப்படையில் நடைமுறைக்கு வந்த பாடசாலை மட்டக் கணிப்பீடும் (School based assessment) நியதி சார் மதிப்பீட்டினையே வலியுறுத்துகிறது. இந்தக் கணிப்பீட்டின் விளைவாக பாடசாலைகளில் ஏற்பட்டு வரும் சாதகமான மாற்றங்களையும் எதிர்நோக்கும் பிரச்சினையையும் மிக அண்மைய ஆய்வுகள் எடுத்துக் காட்டியுள்ளன.

* வகுப்பறைச் செயற்பாடுகளில் மாணவர்கள் விருப்பத்துடனும் அக்கறையுடனும் பங்கேற்கின்றனர்.
* மரபு முறை மதிப்பீடுகளுக்குப் பதிலாக குழுச்செயற்பாடுகள், ஒப்படைகள், செய்முறைப் பயிற்சிகளின் அடிப்படையில் மாணவர்கள் மதிப்பிடப்படுகின்றனர்.
* கற்றல்- கற்பித்தல் முறைகளில் முன்னேற்றம்.
* மாணவருக்கும், பெற்றோருக்கும் பின்னூட்டல் தகவல்கள் வழங்கப்படுதல்.

மறுபுறத்தில் பின்வரும் பிரச்சினைகளும் இங்கு கண்டறியப்பட்டுள்ளன.

1. புதிய முறையிலான மதிப்பீடுகளை மேற்கொள்ளப் போதியளவில் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் இல்லை.
2. மதிப்பீட்டுக் கருவிகளை ஆயத்தம் செய்வதற்கும், மதிப்பீடுகளை நடத்துவதற்கும் நேரம் போதாமை.
3. மாணவர் தொகை கூடுதலாகவுள்ள வகுப்பறைகளைக் கையாள்வதில் உள்ள கஷ்டங்கள்.
4. மதிப்பீடு நடைபெறும் நாட்களில் மாணவர்கள் வரவின்மை.

மாணவர் மதிப்பீட்டில் சோதனைகளும், ஏனைய மதிப்பீட்டுக் கருவிகளும் பிரதானமானவை. இத்தகைய சோதனைகளுக்கு நீண்டகால மரபும் உண்டு. ஆரம்ப காலங்களிலே பெரிதும் அகவயச்சோதனைகளே பயன்படுத்தப்பட்டன. காலப்போக்கில் புறவயச் சோதனைகளும் அறிமுகப்படுத்தும் பொழுது, அவற்றினை ஆயத்தம் செய்யும் நுட்பங்களும், செயல்முறைகளும் ஆசிரியர்களுக்குச் சிக்கலாக இருந்தன. கல்வியியலாளர் சிலரது கருத்தின்படி புறவயச் சோதனைகள் மாணவரின் "நுண்மதியை அவமதிக்கின்றன" எனத் தெரிவிக்கப்பட்டுள்ள போதிலும், இவை அகவயச் சோதனைகளிலும் பார்க்கப் பல நன்மைகளைக் கொண்டுள்ளன. எனவே, இந்த வகைச் சோதனைகளை இலகுபடுத்துவதில் ஆர்வம் காட்டப்பட்டது.

புறவயச் சோதனைகளை அமைக்கும் முயற்சிகள் 19 ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 20 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் ஐரோப்பா மற்றும் அமெரிக்காவில் நுண்மதிச் சோதனைகள், உளச்சார்பை அளவிடுதல் என்பவற்றுடன் ஆரம்பமாயின. காலப்போக்கில் பாடசாலைகளிலும் மாணவர் மதிப்பீட்டுக்குரிய முக்கிய வழிமுறையாக மாற்றம் பெற்ற பொழுது, இத்தகைய சோதனைகளை அமைக்கும் சிறப்பறிஞர் தொகை அதிகரித்தது.

இந்தச் சோதனையை அமைக்கும் விடயம் முக்கியமான ஆய்வுப் பொருளாகவும் மாறியது. இந்த விடயத்தில் அமெரிக்கா பெற்றுக் கொண்ட அனுபவங்கள் உலகெங்கும் பரவின.

1980 ஆம் ஆண்டுகளில் உலகளாவிய ரீதியில், கல்வி முறைமையில் பாரிய சீர்திருத்தங்கள் நடைபெறலாயின. கற்றல்-கற்பித்தல் முறைகள், பாடசாலை ஒழுங்கமைப்பு, ஆசிரியர் பயிற்சி முதலான விடயங்கள் மீள் பரிசீலனைக்கு உள்ளாயின. இது காலவரையில் நடைமுறையிலிருந்து வந்த 'மதிப்பீடு' என்ற சொல்லுக்குப் பதிலாகக் 'கணிப்பீடு' (Assessment) என்ற சொல் அறிமுகமானது. கணிப்பீடு என்ற சொல் ஆசிரியருக்கும் மாணவருக்கும் இடையே இடைவினைத் தாக்கத்தை ஊக்குவித்தன. மேலும் மாணவர் தமது அறிவினையும் பயன்படுத்துவதில் தேர்ச்சி மற்றும் திறன்களை வெளிப்படுத்த வழி கோலியுள்ளன. இவற்றின் மீதான விசேட கல்விசார் அணுகுமுறைகள் வகுப்பறைக் கற்றல்-கற்பித்தல் எண்ணக் கருக்கள், உபாயங்கள் ஆகியவற்றிலும் பாரிய மாற்றங்களுக்கு வித்திட்டுள்ளன.

**மாதங்கி**

# வன்னி வீதிகளை மேவிப்பாயும் வெள்ளம்







## நாடெங்கும் மழை...

610 குடும்பங்களும் பாதிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, இரணைமடு குளத்துக்கு பெருமளவில் நீர் வந்துகொண்டிருப்பதால் அதன் கொள்ளளவான 28 அடியைவிட 6 அடிக்கு மேலாக வான்பாய்ந்து கொண்டிருக்கிறது. குளத்தின் நீர்மட்டம் அதிகரித்ததையடுத்து நேற்றுமுன்தினம் 11 வான் கதவுகள் திறந்துவிடப்பட்டபோதிலும் நீர் வரத்து அதிகமாகியே இரணைமடு வான்பாய்கின்றது. இதனால் மக்களை எச்சரிக்கையாக இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

நேற்று மழை ஓரளவு தணிந்தபடியால் கனகாம்பிகை குளம் மற்றும் புதுமுறிப்பு குளம் உடைப்பெடுக்கும் அபாயம் தடுக்கப்பட்டுள்ளது. இதேவேளை அக்கராயன் குளத்துக்கான நீர் வரத்து அதிகரித்ததால் வெள்ள அணை உடைப்பெடுத்துள்ளது.

இதனால் குடியிருப்புக்களினுள் வெள்ளம் புகுந்துள்ளது. இதையடுத்து மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர். மணியங்குளம், ஈச்சங்குளம் ஆகியவற்றின் அணைகளில் சேதம் ஏற்பட்டு நீர் வெளியேறுவதால் அப்பகுதி மக்கள் இடம்பெயர்ந்து அக்கராயன் மற்றும் ஸ்கந்தபுரம் 2 ஆம் பாடசாலை ஆகியவற்றில் தங்கியுள்ளனர். மணியங்குளத்தை சேர்ந்த 111 குடும்பங்களும், கண்ணகிபுரத்தைச் சேர்ந்த 30 குடும்பங்களும் இந்தப் பாடசாலைகளில் தங்கியுள்ளன.

அக்கராயன் பகுதிக்கான போக்குவரத்தை மேற்கொள்ளமுடியாதவாறு வீதிகளை குறுக்கறுத்து வெள்ளம் பாய்கின்றது. இதேவேளை பரந்தன் - பூநகரி வீதி முற்றாக தடைப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிகளை மேற்கொள்வது குறித்து கிளிநொச்சி அரச செயலகத்தில் நேற்றுக்காலை கூட்டமொன்று நடைபெற்றது.

இதேவேளை, முல்லைத்தீவு மாவட்டத்தில் பெய்த அடை மழையால் 17ஆயிரத்து450 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதுடன், பெருமளவானோர்பாடசாலைகளில் தங்கியுள்ளனர். சுமார் 14 கிராமங்களுக்கான தொடர்புகள் துண்டிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு துண்டிக்கப்பட்ட கிராமங்களுக்கு படகுகள் அனுப்பப்பட்டு மக்கள் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டு வருகின்றனர். கடற்புலிகள் இந்த சேவையை மேற்கொண்டுவருகின்றனர்.

குறிப்பாக சுனாமியால் பாதிக்கப் பட்ட மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்துள்ளனர். செம்மன் குன்று, மாத்தளன், பொக்காணை, வலைஞர்மடம் போன்ற பகுதிகளுக்கான போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளது.

பரந்தன் - புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவுக்கான போக்குவரத்து பெரும் சிரமத்திற்குட்பட்டதாகவே நேற்றும் நடைபெற்றது.

முல்லை மாவட்ட துணுக்காய், பாண்டியன் குள பிரதேசங்களில் பாதிக்கப்பட்ட 500 குடும்பங்களுக்கு தமிழர் புனர்வாழ்வுக்கழகம் சமைத்த உணவை வழங்கி வருகின்றது.

வடமராட்சி கிழக்குக்கான போக்குவரத்துக்களும் பாதிக்கப்பட்டுள்ளன. வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு, ஆழியவளை போன்ற பகுதிகளைச் சேர்ந்த மக்கள் படகுகள் மூலமே போக்குவரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

மன்னார் மாவட்டத்தில் வெள்ளப்பெருக்கினால் 460 குடும்பங்களைச் சேர்ந்த 2000 பேர் இடம்பெயர்ந்துள்ளதாக மாவட்ட மேலதிக அரச அதிபர் அ.நீக்கிலாப்பிள்ளை தெரிவித்தார். இலுப்பைக் கடவையில் இடம் பெயர்ந்து தங்கியுள்ள 25 குடும்பங்களுக்கு தமிழர் புனர்வாழ்வுக்கழகம் சமைத்த உணவினை வழங்கி வருகின்றது.

வெள்ளாங்குளம் பகுதியில் பாலிஆறு வீதியை மேவி பாய்வதால் சகல போக்குவரத்துக்களும் துண்டிக்கப்பட்டுள்ளன.

இந்தப் பகுதிகளில் ஏற்பட்ட பாரிய வெள்ளப் பெருக்கினால் பெருமளவு நெல்வயல்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதுடன், கால்நடைகளும் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டன.

கிழக்கு மாகாணம் மட்டக்களப்பு மாவட்டத்தில் காத்தான் குடி மற்றும் பல இடங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதாகவும், 20 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக வும் மாவட்ட அரசாங்க அதிபர் புண்ணிய மூர்த்தி தெரிவித்தார்.

திருகோணமலையில் பத்துக்கு மேற்பட்ட கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. புல்மோட்டை, திரியாய், சலப்பையாறு பகுதிகளில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்கள் தற்காலிக குடியிருப்புகளில் வாழ்ந்து வந்தனர். இந்தக் குடியிருப்புக்களில் வெள்ளம் புகுந்ததால் அந்த மக்கள் மீண்டும் இடம்பெயர்ந்துள்ளனர்.

இதேவேளை கொழும்பு, களுத்துறை, கம்பஹா, அனுராதபுரம், பொலனறுவ ஆகிய மாவட்டங்களின் தாழ் நிலப்பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

களனிகங்கை உடைப்பெடுத்ததால் தென் பகுதியில் வெள்ளப்பெருக்கு பாரியளவில் ஏற்பட்டுள்ளது. கொழும்பு மாவட்டத்தில் 6ஆயிரத்து 500 குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன. 2000 வீடுகள் நீரில் மூழ்கியுள்ளன.

இடம்பெயர்ந்த மக்கள் பாடசாலைகளிலும், உறவினர் வீடுகளிலும் தங்கவைக்கப்பட்டுள்ளனர். களனிகங்கை உடைப்பெடுத்துள்ளதால் களனி கங்கைக்கு அருகில் வசிக்கும் மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு இடம் பெயருமாறு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.


கொழும்பு - பியகம புதிய கண்டிவீதியில் அமைந்துள்ள பட்டிவில பிரதேசத்தில் 600 வீடுகள் நீரில் மூழ்கியுள்ளன.

கொழும்பு, ஹொரண, பாதுக்கை ஆகிய பிரதேசங்களில் நால்வர் நீரில் மூழ்கியும், இருவர் சுவர் இடிந்து வீழ்ந்தும் உயிரிழந்தனர். தென் பகுதியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களை விமானப்படையினர் ஹெலிகொப்டர்கள் மூலம் மீட்டனர்.

இதேவேளை, நாடு முழுவதும் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கினால் சுமார் ஐம்பதாயிரம் குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

### 15 ஆண்டுகால ராஜ்ஜியம் முடிவிற்குவந்தது

# பீகார் சட்டமன்றத் தேர்தலில் லல்லுவின் கட்சி படுதோல்வி



பாட்னா —

பீகாரில் நடந்த தேர்தலில் பாரதிய ஜனதா - ஐக்கிய ஜனதா தளம் கூட்டணி பெரும்பான்மை இடங்களைக் கைப்பற்றியுள்ளதனால், கடந்த 15 வருட காலமாக பீகாரில் தனி ராஜ்ஜியம் நடத்தி வந்த மத்திய ரயில்வேத் துறை அமைச்சர் லல்லு பிரசாத் யாதவின் அரசியல் செல்வாக்கு முடிவுக்கு வந்தது.

பீகார் மாநில சட்டசபைக்கு நான்கு கட்டமாக கடந்த மாதம் 18 ஆம் திகதி தொடக்கம் கடந்த 19 ஆம் திகதிவரை ஒரு மாதமாக தேர்தல் நடத்தப்பட்டது.

மொத்தம் உள்ள 243 இடங்களுக்கு 2135 பேர் வேட்பாளர்களாகப் போட்டியிட்டனர். எல்லாத் தொகுதிகளிலும் மின்னணு இயந்திரங்கள் மூலம் வாக்குப்பதிவு செய்யப்பட்டது. நேற்றுக் காலை 8 மணிக்கு 38 மாவட்டங்களில் உள்ள 41 மையங்களில் வாக்கு எண்ணிக்கை தொடங்கியது.

வாக்கு எண்ணிக்கையில் எந்தவித தில்லுமுல்லும் நடந்துவிடக்கூடாது என்பதற்காகப் பல்வேறு ஏற்பாடுகளைத் தலைமைத் தேர்தல் ஆணையம் செய்திருந்தது. அதன்படி வாக்கு எண்ணிக்கை நடக்கும் 41 மையங்களிலும் நவீன கமராக்கள் பொருத்தப்பட்டிருந்தன. ஒவ்வொரு இயந்திரத்தின் வாக்கு எண்ணிக்கையும் அந்த கமராக்கள் மூலம் கண்காணிக்கப்பட்டன.

வாக்கு எண்ணிக்கை முழுவதும் வீடியோவில் படம் பிடிக்கப்பட்டது. தேர்தல் முடிவுகளை உடனுக்குடன் தெரிந்துகொள்வதற்காக 41 மையங்களும் இணையத்தளம் மூலம் இணைக்கப்பட்டிருந்தன. இதனால் காலை 8.30 மணியளவில் கட்சிகளின் முன்னணி நிலவரம் அறிவிக்கப்பட்டது.

வாக்குப்பதிவு முடிந்ததும் வெளியிடப்பட்ட கருத்துக்கணிப்புகளில் பாரதீய ஜனதா - ஐக்கிய ஜனதா தளம் கூட்டணி அதிக இடங்களைக் கைப்பற்றும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், அதையும் மிஞ்சும் வகையில் பா.ஜ.க. கூட்டணிக்கு அதிக இடங்கள் கிடைத்தது. தொடக்கத்திலேயே பாரதீய ஜனதா, ஐக்கிய ஜனதா தளம் கூட்டணி அதிக இடங்களில் முன்னிலை பெற்றது.

நேற்றுக்காலை 10.30 மணி நிலவரப்படி பாரதீய ஜனதா - ஐக்கிய ஜனதா தளம் கூட்டணி 136 இடங்களில் முன்னணியில் இருந்தது. லல்லு பிரசாத் யாதவின் ராஷ்டீரிய ஜனதா




தளம் கூட்டணி 62 இடங்களுடன் பின்தங்கிவிட்டது.

ராம் விலாஸ் பஸ்வானின் லோக் ஜனசக்தி கட்சிக்கு இந்தத் தடவை பலத்த தோல்வி கிடைத்தது. ஏற்கனவே வென்ற பல இடங்களை அந்தக் கட்சி இழந்தது.

பாரதீய ஜனதா, ஐக்கிய ஜனதா தளம் கட்சிக்கு அதிக பட்சமாக 141 இடங்கள் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. லல்லு பிரசாத், சோனியா கூட்டணிக்கு 70 இடங்களே கிடைக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

பெரும்பான்மை இடங்களை கைப்பற்றுவதன் மூலம் பீகார் மாநிலத்தில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டுள்ளது. பாரதீய ஜனதா, ஐக்கிய ஜனதா



தளம் கூட்டணி ஆட்சியைப் பிடிக்கிறது.

லல்லு பிரசாத் யாதவின் ராஷ்டீரிய ஜனதா தளம், காங்கிரஸ் கூட்டணி தோல்வியை சந்தித்துள்ளது. இதனால் பீகாரில் கடந்த 15 ஆண்டுகளாக தனி ராஜ்ஜியம் நடத்தி வந்த லல்லு பிரசாத் யாதவின் அரசியல் செல்வாக்கு முடிவுக்கு வந்துள்ளது.

அவரது பந்தா அரசியல் நடவடிக்கைகளுக்கு பீகார் மக்கள் முடிவு கட்டியுள்ளனர். அதுபோல கடந்த தேர்தலின் போது எந்தக் கட்சியையும் ஆட்சி அமைக்க விடாமல் அல்லாடவைத்த ராம் விலாஸ் பஸ்வானின் லோக் ஜனசக்தியையும் மக்கள் புறக்கணித்துவிட்டனர்.

பீகார் மாநிலத்தில் உள்ள யாதவர்களும், முஸ்லிம்களும்தான் ஆட்சியை நிர்ணயிப்பதில் முக்கிய பங்கு வகிக்கின்றனர். இதைக் கருத்தில் கொண்டு இந்தத் தடவை 47 முஸ்லிம்களை ராம்விலாஸ் பஸ்வான் களத்தில் இறக்கியிருந்தார். என்றாலும் அவரை முஸ்லிம்கள் நிராகரித்துவிட்டனர்.

பாரதீய ஜனதா, ஐக்கிய ஜனதா தளம் கூட்டணிக்கு இந்தத் தடவை முஸ்லிம்களின் வாக்கு கணிசமாக கிடைத்துள்ளது. மொத்தம் உள்ள 16.5 சதவீத முஸ்லிம்களில் பெரும்பாலானவர்கள் நிதிஷ்குமாரை ஆதரித்துள்ளனர்.

அதற்குக் காரணம் நிதிஷ்குமாரின் புதிய அறிவிப்புத்தான். அவர் தேர்தல் பிரசாரத்தின் போது தலித் முஸ்லிம்களுக்கு இட ஒதுக்கீடு அளிக்கப் போவதாக உறுதி வழங்கினார். அவரது இந்த அறிவிப்பு ஐக்கிய ஜனதா தளம் கட்சிக்கு கூடுதல் இடம் கிடைக்க வழிவகை செய்துள்ளது.

பீகார் மாநிலத்தில் லல்லு பிரசாத் யாதவுக்கு எதிராக மற்றுமொரு கட்சி வரலாறு காணாத வெற்றியைப் பெற்றிருப்பது இதுவே முதல் தடவையாகும். லல்லுவின் அரசியல் எதிரியான நிதிஷ்குமார் தலைமையில் ஐக்கிய ஜனதா தளம் ஆட்சியைப் பிடித்துள்ளது.

பீகார் மாநில சட்டசபையில் மொத்த உறுப்பினர்கள் எண்ணிக்கை 243. ஆட்சி அமைக்க 122 பேர் பலம் தேவை. நிதிஷ்குமாருக்கு இதைவிட கூடுதல் உறுப்பினர்கள் ஆதரவு கிடைக்கிறது. எனவே, அவர் தனி பெரும்பான்மையுடன் ஆட்சி அமைக்கிறார்.

பீகாரின் அடுத்த புதிய முதலமைச்சராக நிதிஷ்குமார் இன்னும் ஓரிரு நாட்களில் பதவி ஏற்கிறார். இதன் மூலம் லல்லு குடும்பத்தினரின் 15 ஆண்டுகால ஆட்சி முடிந்துவிட்டது.

பீகார் சட்டசபை தேர்தலில் எந்தக் கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்காது கடந்த தேர்தலைப் போல் இழுபறி நிலை ஏற்படும் என்று பல்வேறு நிறுவனங்கள் நடத்தி கருத்துக் கணிப்பில் தெரிவிக்கப்பட்டது.

ஆனால், இந்தக் கருத்துக் கணிப்புக்கள் எதுவும் பலிக்கவில்லை. பாரதீய ஜனதா கூட்டணிக்கு பெரும்பான்மைப் பலம் கிடைக்கும் நிலை உருவாகியுள்ளது. பாரதீய ஜனதா கூட்டணிக்கு அதிக இடங்கள் கிடைக்கும் என்ற கணிப்பு மட்டும் பலித்திருக்கிறது.

## உலக நோக்கு

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# சமாதான நடவடிக்கைகளுக்கு மீண்டும் உயிரூட்ட வேண்டும்!

## ஜப்பானிய அரசாங்கம் வலியுறுத்தல்

கொழும்பு —

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான சமாதான நடவடிக்கைகளுக்கு மீண்டும் உயிரூட்டப்படவேண்டும் என்று ஜப்பான் வலியுறுத்தி கேட்டுள்ளது.

புதிய ஜனாதிபதியாக மகிந்த ராஜபக்ஷ பொறுப்பேற்றமை தொடர்பாக கருத்து வெளியிட்டபோதே ஜப்பானிய வெளிவிவகார அமைச்சின் ஊடகப் பணிப்பாளர் கோஷினோரி கடோரி இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்து வெளியிடுகையில் -

இலங்கையின் சமாதானம் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக ஜப்பான் தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் செயற்படும். ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தலைமைத்துவத்தின் கீழ் சமாதான நடவடிக்கைகளுக்கு மீண்டும் உயிரூட்டப்படும் என ஜப்பான் நம்புகிறது.

தேர்தல் அமைதியான முறையில் நடத்தப்பட்டமை மகிழ்ச்சி அளிக்கிறது. வடக்கு - கிழக்கு மக்கள் வாக்களிப்பை பகிஷ்கரித்தமை மற்றும் தேர்தலின்போது சிறு அளவிலான வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாகவும் ஜப்பான் கவனம் செலுத்தியுள்ளது.

புதிய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்திற்கும், ஜப்பான் அரசாங்கத்திற்கும் இடையிலான நட்புறவு மேலும் வலுவடையும் என்று ஜப்பான் நம்பிக்கை கொண்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (01)

# நெடுந்தீவில் கைதான ஏழு பேருக்கும் பிணை!

யாழ்ப்பாணம் —

நெடுந்தீவில் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்ட ஏழு இளைஞர்களும் நேற்று ஊர்காவற்துறை நீதிவான் கே.பாலசுப்பிரமணியத்தின் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டு, பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

ஒவ்வொருவரையும் தலா 5000 ரூபா பிணையில் செல்ல நீதிவான் உத்தரவிட்டதாக நெடுந்தீவு பொலிஸ் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

நெடுந்தீவில் கடற்படைச் சிப்பாய் ஒருவர் காணாமற்போனமை தொடர்பாக கடற்படையினரும் பொலிஸாரும் இணைந்து நடத்திய தேடுதலின் போது இவர்கள் நேற்றுமுன்தினம் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டனர்.

வாரம் ஒருமுறை பொலிஸ் நிலையத்துக்கு வந்து கையொப்பம் இட வேண்டும் என்று நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

# படைமுகாமுக்குள் நுழைந்ததாக தமிழ் இளைஞர் ஒருவர் கைது!

திருகோணமலை

திருகோணமலை பிளாண்டன் பொயின்ற் இராணுவ முகாமுக்குள் அத்துமீறி நுழைந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் இளைஞர் ஒருவர் படையினரால் கைது செய்யப்பட்டார்.

மூதூர் கிளிவெட்டி தங்க நகரைச் சேர்ந்த அருள்தாஸ் சுசிலகுமார் (வயது 32) என்பவரே கைது செய்யப்பட்டவராவார்.

நேற்று முன்தினம் திருகோணமலை பிளாண்டன் பொயின்ற் வீதியூடாக சென்று கொண்டிருந்த வேளை இராணுவ முகாமுக்குள் அனுமதியின்றி நுழைந்தார் எனத் தெரிவித்து படையினர் இவரைக் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட மேற்படி இளைஞர் மூதூர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். (04)

## அவசர...

தொடர்ந்து நீடிக்கப்பட்டு வந்த இந்த அவசரகாலச் சட்டம், கடந்த முறை நாடாளுமன்றில் தாக்கல் செய்யப்பட்டபோது தேர்தலுக்குப் பின் விலக்கிக் கொள்ளப்படும் என்று பிரதிப் பாதுகாப்பு அமைச்சராக இருந்த இப்போதைய பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## உயர் படிப்பை...

ரணில் விக்கிரமசிங்க தனது உயர்கல்வியைத் தொடரும் நோக்குடன் மனைவியுடன் அடுத்த வருடம் ஜனவரிமாத முற்பகுதியில் பிரிட்டனுக்குச் செல்லவுள்ளதாகவும் அந்தத் தகவல்கள் தெரிவித்தன.

நடைபெற்றுமுடிந்த ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியடைந்த ரணில் விக்கிரமசிங்க மிகவும் அதிருப்தியடைந்திருந்ததுடன், கட்சியின் தலைமைப் பதவியிலிருந்து விலகுவதற்கும் ஏற்கனவே தீர்மானித்திருந்தார்.

அத்துடன், கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜெயசூரியவை கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்குமாறும் கேட்டுள்ளார்.

# காயமுற்ற ஈ.பி.டி.பி உறுப்பினர் சிகிச்சை பலனின்றி உயிரிழப்பு!

கொழும்பு —

மட்டக்களப்பு - தாண்டவன் வெளிச்சந்திப் பகுதியில் தினமுரசு பத்திரிகை விநியோகிப்பதற்கு சென்ற வேளை இனந்தெரியாத நபர்களின் தாக்குதலில் படுகாயமடைந்து கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்த ஈ.பி.டி.பி உறுப்பினர் சிகிச்சை பலனின்றி கடந்த புதன்கிழமை உயிரிழந்தார்.

எஸ்.சுரேந்திரன் என்ற ஈ.பி.டி.பி உறுப்பினரே இவ்வாறு படுகாயமடைந்தவராவார்.

கடந்த மூன்றாம் திகதி பொலிஸாரின் பாதுகாப்புடன் ஓட்டோ ஒன்றில் தினமுரசு பத்திரிகை விநியோகிக்க சென்றவேளை தாண்டவன் வெளிச்சந்திப் பகுதியில் வைத்து இவர்கள் மீது இனந்தெரியாதோர் துப்பாக்கிப் பிரயோகம் மேற் கொண்டதில் மேற்படி நபர் படுகாயமடைந்தார்.

இதனையடுத்து கொழும்பு தேசிய வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்ட இவருக்கு செயற்கைச் சுவாச சிகிச்சை அளிக்கப்பட்டது. எனினும், சிகிச்சை பலனின்றி கடந்த புதன்கிழமை இவர் உயிரிழந்தார்.

இவரது சடலம் பிரேத பரிசோதனையின் பின்னர் ஒப்படைக்கப்பட்டது. இது தொடர்பாக மட்டக்களப்பு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

## ரட்ணசிறியின் பிரதமர்...

சக்திகளுடன் கூட்டுச் சேர்ந்து தனது வெற்றியை உறுதிப்படுத்திக்கொண்ட மகிந்த ராஜபக்ஷ - பிரதமராக ரட்ணசிறி விக்கிரமநாயக்கவை நியமித்துள்ளமையானது - யுத்தமொன்றுக்கு அரசு தயாராகின்றதா என்ற சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

அதேநேரம் மறு புறத்தில் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான விடுதலைப் புலிகளது புறக்கணிப்பு என்ற நிலைப்பாடும்கூட தென்னிலங்கை ஆட்சியாளர்களுக்கு சவால் விடுப்பதாகவே அமைந்துள்ளது. மீண்டும் ஒரு யுத்தத்துக்கு முகங்கொடுக்க நேரிட்டால் கிழக்கில் தமது நிலைகளை விரிவுபடுத்த விடுதலைப் புலிகளும் பெரும் முயற்சிகளில் ஈடுபட வேண்டிவரும்.

அதேவேளை, நாட்டின் புதிய ஜனாதிபதி தற்போதைய சமாதான முயற்சிகளை மீளாய்வு செய்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதுடன், அதற்கு இந்தியாவின் உதவியைக் கோரும் நிலைப்பாட்டிலும் உள்ளார்.

நாட்டின் முதன்மைப் பிரச்சினையான இன நெருக்கடித் தீர்வு தொடர்பிலான இழுத்தடிப்பு, மறுபுறத்தில் வேலையில்லாப் பிரச்சினை, பொருளாதார பின்னடைவு என்பவற்றுக்கு மத்தியில் மோதலுக்குரிய முரண்பாட்டுச் சூழல் ஒன்று உருவாக்கப்பட்டு வருவதுடன் நாடு மிகவும் மோசமான சூழல் ஒன்றுக்கு முகங்கொடுத்து வருவதையே சுட்டிக் காட்டுகின்றது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## ஐ.தே.க. புதிய தலைவராக...

நியமிக்கப்படவுள்ளனர் எனத் தெரிவித்தார்.

ரணிலின் விலகல் தொடர்பாக ஐ.தே.க நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரட்ண கருத்து வெளியிடுகையில்-

கட்சியின் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் இனப்பிரச்சினை தொடர்பான நிலைப்பாடுகளில் எதுவித மாற்றமும் இல்லை. கொள்கை விடயங்களில் ரணிலின் ஆலோசனை தொடர்ந்தும் பெறப்படும்.

புதிய ஜனாதிபதியாக மகிந்த ராஜபக்ஷ தெரிவு செய்யப்பட்ட நிலையிலேயே எதிர்க் கட்சியிலிருக்கும் முரண்கள் வெளிப்படத் தொடங்கியுள்ளன. பிரதமராக மங்கள சமரவீரவை ஜே.வி.பி பரிந்துரைத்தது. ஆனால், கடும் போக்காளரான ரட்ணசிறி விக்கிரமநாயக்கவை மகிந்த ராஜபக்ஷ நியமித்துள்ளார் என ராஜித சேனாரட்ண தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் பொறுப்பிலிருந்து மலிக் சமரவிக்கிரம விலகியுள்ள நிலையில்-தவிசாளர் மற்றும் பொதுச் செயலாளர் பதவிகளுக்கு செயற்பாட்டுத்திறன் உள்ளவர்களை நியமிக்கவும் அக்கட்சி முடிவு செய்துள்ளது.

இதேவேளை, எதிர்க்கட்சித் தலைவராகவும் கரு ஜெயசூரிய நியமிக்கப்படவிருப்பதாக ஐ.தே.க நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த சமரசிங்க தெரிவித்தார்.

## நோர்வே அமைச்சர்...

புதிய ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றுள்ள மஹிந்த ராஜபக்ஷ போர் நிறுத்த ஒப்பந்தம் தொடருமென்று அறிவித்துள்ளார். போர் நிறுத்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ள இரு தரப்பில் உள்ள ஒரு தரப்பு விலகுமாறு கேட்டுக் கொண்டாலும் நாம் விலக வேண்டும்.

போர்நிறுத்த ஒப்பந்தத்தை விலக்கிக் கொள்ள 14 நாட்களுக்கு முன்பாக அறிவுறுத்தல் விடுக்கப்பட வேண்டும். ஆனால், தற்போது அப்படியான சூழல் இருக்கவில்லை.

கண்காணிப்புக் குழுவினர் தமது வழமையான பணிகளைத் தொடர்ந்து மேற்கொள்வர்.

போர்நிறுத்த ஒப்பந்தத்தை முழு அளவில் நடைமுறைப்படுத்த இரு தரப்பினரும் பேச்சுக்களை நடத்த வேண்டும். கிழக்குப் பிரதேசத்தின் தற்போதைய நிலைமைகளைக் கருத்தில் கொண்டால் இந்தப் பேச்சுகள் அவசியமானது என அவர் மேலும் தெரிவித்தார்.

## அமைச்சரவை நியமனத்தில்...

அமைச்சரவையில் 25 அமைச்சர்களே அங்கம் வகிப்பர். பாதுகாப்பு மற்றும் நிதி அமைச்சுக்கள் ஜனாதிபதியின் வசம் இருக்கும். ஜே.வி.பியோ ஜாதிக ஹெல உறுமயவோ அமைச்சரவையில் உள்ளடக்கப்படவில்லை. ஆனால் ஈ.பி.டி.பிக்கு ஒரு இடம் வழங்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

தற்போது 35 ஆகவுள்ள அமைச்சர்களின் உறுப்பினர்களின் தொகையினை 25 ஆகக் குறைக்க ஜனாதிபதி மகிந்த திட்டமிட்டுள்ளார். இதன்படி முன்னாள் அமைச்சர்கள் 10 பேர் பதவியிழக்கவுள்ளனர்.

நேற்று 35 முன்னாள் அமைச்சர்களையும் அழைத்த ஜனாதிபதி மகிந்த, அமைச்சரவை 25 பேராகக் குறைக்கவிருப்பதாகத் தெரிவித்தார். இதன்படி முன்னாள் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சரான டிலான் பெரேரா, முன்னாள் போக்குவரத்து அமைச்சரான பீலிக்ஸ் பெரேரா, முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் ஜீவன் குமாரதுங்க, முன்னாள் சுதேச மருத்துவத்துறை அமைச்சர் திஸ்ஸ கரலியத்த, முன்னாள் மீன்பிடித்துறை அமைச்சர் மில்றோய் பெர்னாண்டோ உட்பட 10 அமைச்சர்களே பதவி இழக்கவுள்ளனர்.

குறிப்பாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவுக்கு நெருக்கமானவர்களை ஓரங்கட்டுவதில் மகிந்த ராஜபக்ஷ உறுதியாக இருப்பதாக உயர் மட்டத் தகவல்கள் தெரிவித்தன.

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸா அமைத்திருந்ததைப் போல இராஜாங்க அமைச்சர்கள் என்ற பதவிகளை உருவாக்க மகிந்த ராஜபக்ஷ முடிவு செய்துள்ளார். இவர்கள் அமைச்சரவை அந்தஸ்தல்லாத அமைச்சர்களாக இருப்பர்.

அமைச்சரவை அந்தஸ்து பெறாத அமைச்சர்களைப் போலவே, இராஜாங்க அமைச்சர்களுக்கு வசதிகள் வழங்கப்படும் என்றும் அதில் கொள்கை வகுப்புத் தொடர்பான அதிகாரங்கள் மட்டும் இவர்களுக்கு இருக்காது எனவும் அலரி மாளிகைப் பேச்சாளர் தெரிவித்தார்.

ஊடகத்துறை அமைச்சுப் பொறுப்புத் தொடர்பாக அனுர பிரியதர்சன யாப்பாவுக்கும், சிறிபதி சூரியாராய்ச்சிக்கும் இடையில் இழுபறி நிலை காணப்படுகிறது.

பிரதிநிதி அமைச்சராக திறைசேரி செயலாளர் பி.பி.ஜயசுந்தர நியமிக்கப்படலாம் என்று தெரியவருகிறது.

வெளிவிவகார அமைச்சராக இருந்த அனுர பண்டாரநாயக்க, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அமைச்சரவையில் எந்தவொரு அமைச்சர் பதவியையும் ஏற்பதில்லையென முடிவு செய்திருப்பதாக பண்டார நாயக்க குடும்ப வட்டாரங்கள் தெரிவித்தன.

தொடர்ந்தும் சாதாரண நாடாளுமன்ற உறுப்பினராகவே பதவி வகிப்பேன் என்றும் இவர் மகிந்த ராஜபக்ஷவிற்கு அறிவித்திருப்பதாகவும் தெரியவருகிறது.

## விமல் வீரவன்ச...

தெரிவித்தன.

கொழும்பு தேசிய வைத்திய சாலையின் இருதயசிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ள விமல் வீரவன்சவுக்கு தொடர்ந்து சிகிச்சையளிக்கப்பட்டு வருவதாகவும், இவர் ஆபத்தான கட்டத்தைத் தாண்டி விட்டாரெனவும் வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவித்தன.

## மரண அறிவித்தல்கள்

### இராசையா அரசகேசரி
### (பிரதம லிகிதர் - கிளிநொச்சி கச்சேரி)

அரியாலையைப் பிறப்பிடமாகவும் கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா அரசகேசரி அவர்கள் (பிரதம லிகிதர் கிளி. கச்சேரி, நமது ஈழநாடு கிளிநொச்சி பிரதேச செய்தியாளர்) 22.11.2005 செவ்வாய்க்கிழமை அன்று காலமாகிவிட்டார்.


அன்னாரின் இறுதிக் கிரியைகள் 23.11.2005 இன்று புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக அரியாலை சித்திப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல் :
இ.மதிகரன்
(சகோதரன்)

159/3 நொத்தாரிஸ் வீதி,
அரியாலை.

(இ)

### சிவசுப்பிரமணியம் பாணுருபன்



கரணவாய் தெற்கு, மூத்த விநாயகர் கோவிலடியைச் சேர்ந்த சிவசுப்பிரமணியம் பாணுருபன் நேற்றுமுன்தினம் கொழும்பு அப்பலோ வைத்தியசாலையில் அகால மரணமானார்.

அன்னார் பொன்னுத்துரை சிவசுப்பிரமணியம், திருமதி சோதிமலர் சிவசுப்பிரமணியம் தம்பதியினரின் அன்பு மகனும், பாணுராஜா (ஆசிரியர் - அக்கராயன் மகா வித்தியாலயம்), பாணுதீபன் (மாணவன், நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்), பாணுரேகா ஆகியோரின் அன்புச் சகோதரனும், பாணுராஜா அனிதா (பளை பிரதேச செயலகம்) வின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று கிராய் மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
பொ.சிவசுப்பிரமணியம்
அஞ்சல் அதிபர் (உதவி)
பருத்தித்துறை

மூத்த விநாயகர் கோவிலடி,
கரணவாய் தெற்கு,
கரணவாய்.

இப்பத்திரிகை இல.267 , நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 23.11.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.